விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மாட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 182 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 04 செவ்வாய்க்கிழமை (18.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## கடலட்டை உற்பத்தி அபரீதமான வளர்ச்சி
### யாழ்.மக்களே பயன் அடைகின்றனர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

கடலட்டை உற்பத்தியாழில் அபரீதமான வளர்ச்சி அடைந் ததுடன் யாழ்.மக்களே இதில் அதிக பயன் அடைவதாக அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா தெரிவித்துள் ளார்.

02

## அல்வாயில் சமைத்து கொண்டிருந்த பெண் உயிரிழப்பு

(கரணவாய்)

அல்வாய் வட மேற்கில் சமைத்துக் கொண்டிருந்த பெண் ஒருவர் உயிரிழந்துள் ளார்.

நேற்று திங்கட் கிழமை இச்சம்பவம்

15

## ஜே.வி.பியின் ஆட்சி நாட்டின் இருண்ட யுகம்
### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் ஆட்சி இந்த நாட்டில் இருண்ட யுக மாகும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள் ளார்.

16

## மாதகலில் யுவதிக்கு கொரோனா

(மாதகல்)

மாதகலில் 20 வயது பெண் ணுக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட் டுள்ளது.

அவரது வீட்டுக்கு உற வினர்கள் வெளிநாட் டிலிருந்து வந்து

15

### 13ஆவது திருத்தத்தைப் பயன்படுத்தியே
# தேர்தலில் வெற்றி பெற சஜித் எண்ணுகின்றார்
### அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா



(கொழும்பு)

13ஆம் திருத்தத்தைப் பயன்படுத்தியே ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முயற்சிக்கின்றார் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## இன்று முதல் பாராளுமன்ற அமர்வுகள்

(கொழும்பு)

இன்று முதல் எதிர்வரும் 20ஆம் திகதி வரை பாராளு மன்றம் கூடவுள்ளதாக பாராளு மன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரி வித்துள்ளார்.

இதற் கமைய, இன்று காலை 9.30

15

## திருடன் என்ற பட்டம் இல்லாது ஒழிக்கப்படும்
### நாமல் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

திருடன் என்ற கருத்தும், திருடனைப் பிடித்து ஆட்சிக்கு வருவோம் என்ற கோஷமும் எதிர்வரும் காலங்களில் இல்லா தொழிக்கப் படும் என பாராளு

15

## ஐ.எம்.எப் தாளத்துக்கு ஆடும் பொம்மை ஆட்சியே உள்ளது
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஆடும் பொம்மை ஆட்சியே நாட்டில் உள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ் வொன்றிலேயே இதனைத் தெரிவித்துள்

15

### தமிழ் மொழியே இலங்கையின் ஆதி மொழி
## மரபணு சோதனையில் சிங்களவர்கள் திராவிடர்களின் வழித்தோன்றல் என உறுதி
### விக்னேஸ்வரன் எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ் மொழியே இலங்கைத் தீவின் ஆதி மொழி. மரபணு பரிசோதனைகளின் மூலம் சிங் களவர்கள் தென்னிந்திய திரா விடர்களின் வழித்தோன்றல்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ள தாக பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

16

## நாட்டின் பொருளாதாரம் 11.8 சதவீதத்தால் வளர்ச்சி
### நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் நாட்டின் பொரு ளாதாரம் 5.3 சதவீதத்தினா லும் கைத்தொழில் துறை 11.8 சதவீதத்தாலும் வளர்ச்சி யடைந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இத னைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன்2022ஆம் ஆண்டு நாட்டின் பொருளா தாரம் 12 சதவீதமாக

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி கடவுச்சீட்டு மூலம் பிரிட்டன் செல்ல முயன்ற யுவதியொருவர் கைது

(கொழும்பு)

போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி பிரித்தானியாவுக்கு செல்ல முயன்ற, திருகோணமலையில் வசிக்கும் 24 வயதுடைய யுவதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் இந்த விமான பயணத்திற்கு உதவிய தரகர் ஒருவரும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரான பெண் அனைத்து அனுமதி நடைமுறைகளையும் முடித்துவிட்டு குடியகல்வு சேவை கரும பீடத்திற்கு வந்து கடவுச்சீட்டு மற்றும் பிற ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார்.

இதன்போது கடவுச்சீட்டில் உள்ள புகைப்படம் அவருடையது அல்ல என்பதைக் கண்டறிந்ததால், அவர் தலைமை குடிவரவு அதிகாரியிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இதைத்தொடர்ந்து நடத்தப்பட்ட தொழில்நுட்ப சோதனையில், மற்றொரு பெண்ணின் கடவுச்சீட்டில் இந்த பெண்ணின் தகவல்கள் பதிவு செய்து போலியாக தயாரிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரும் கட்டுநாயக்க விமான நிலைய குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-7)

# ஒலிம்பியாட் கணித போட்டி கட்டைக்காடு றோ.க.த.க மாணவிக்கு தங்கம்



(யாழ்ப்பாணம்)

ஒலிம்பியாட் கணித போட்டியில் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு றோ.க.த.க பாடசாலை மாணவி தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.

சர்வதேச ரீதியிலான 19 வது ஒலிம்பியாட் கணித பரீட்சைக்கான போட்டியில் இவ் ஆண்டு உலகளாவிய ரீதியில் 38 நாடுகளின் 7 ஆயிரத்து 333 பாடசாலைகளைச் சேர்ந்த 57 ஆயிரத்து 60 மாணவர்கள் பிரிவு 1 -12 ல் போட்டியிட்டனர்.

இதில் பிரிவு 6 இல் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்திய தரம் 8 இல் கல்வி பயிலும் மாணவி இனியா தயாபரன் தேசிய தங்கப்பதக்கத்தை வென்று நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இப்போட்டியில் வெற்றியீட்டியதனை தொடர்ந்து சிங்கப்பூரில் நடை பெறவுள்ள போட்டிக்கு இவர் தகுதிபெற்றுள்ளார். (ம-7)

# பொருளாதார நெருக்கடி நாட்டில் பிறப்பு வீதம் பாரியளவு வீழ்ச்சி

நாட்டில் கடந்த 5 வருடங்களில் குழந்தை பிறப்புகள் 100,000 இற்கும் அதிகமாகக் குறைந்துள்ளதாக மகப்பேற்று விசேட வைத்தியர் சனத் லெனரோல் தெரிவித்துள்ளார்.

மகப்பேற்று விசேட வைத்தியர்களினால் கடந்த 5 வருட தகவல்களைக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் போதே இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, 2017 ஆம் ஆண்டு நாட்டில் 325,000 குழந்தைகள் பிறந்துள்ளதாகவும் ஆனால், 2023 ஆம் ஆண்டு 247,000 ஆக எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும்

அத்தோடு, 2017 ஆம் ஆண்டு வருடாந்த மரணம் 146,000 ஆக பதிவாகியுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டு 181,000 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, கர்ப்பமடையும் திருமண வயதுடைய இளைஞர் யுவதிகள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளமையினாலேயே குழந்தை பிறப்புகள் இவ்வாறு வீழ்ச்சியடைந்துள்ளதாகவும்

மேலும், பொருளாதார நெருக்கடியினால் குடும்பம் ஒன்றில் கருத்தரிப்பை மட்டுப்படுத்தல் மற்றும் குழந்தை பெற்றுக் கொள்வதை ஒத்திவைப்பதும் குழந்தை பிறப்பு வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதோடு பொருளாதார நெருக்கடியினால் கடந்த 5 வருடங்களில் திருமணம் செய்துகொள்வது 12.5 வீதத்தால் வீழ்ச்சியடைந் துள்ளதாகவும்

இதனால், வேலை செய்வோர் குறைவடைவதுடன், முதியோர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என மகப்பேற்று விசேட வைத்தியர் சனத் லெனரோல் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## கடலட்டை...

யாழ். மாவட்ட கடலட்டைப் பண்ணையாளர்களுடன் திங்கட்கிழமை (17) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். யாழ் மாவட்டத்தில் சீனர்கள் கடலட்டை பண்ணை தொழிலில் ஈடுபடுவதாக பாராளுமன்ற உறுப்பினர் அண்மையில் தெரிவித்த கருத்தைக் கோடிட்டுக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தற்போது கடலட்டை தொடர்பான தொழிலில் ஈடுபடுவதற்கு யாழ் மாவட்டத்தில் சீனர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

நல்லாட்சியில் கடலட்டை குஞ்சு உற்பத்திக்காக அனுமதிக்கப்பட்ட சீன நிறுவனமும், தற்போதை நல்லாட்சி காலத்தில் வெளியேற்றப்பட்டுள்ளதுடன், நூறு வீதம் யாழ் மாவட்டத்தினை சேர்ந்தவர்களே கடலட்டை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

சிறப்பான பொருளாதார நன்மைகளை வழங்கிவரும் கடலட்டை உற்பத்திகளை மேலும் விரிவாக்கம் செய்து முன்கொண்டு செல்வதற்கு, பண்ணையாளர்கள் நடைமுறை ரீதியாக உணர்ந்து கொண்ட சவால்களுக்கு தீர்வு கிடைக்க வழி வகை செய்யப்படும்.

பொய்களுக்கு மக்கள் இடங்கொடுக்காது வெளிப்படையான உண்மைகளை இனங்கண்டு எதிர்காலத்தை வெற்றி கொள்ள வேண்டும். அதுவே தமிழ் மக்களுக்கு அவசியமானது மாகும். எமது மக்களே எமது பிரதேசங்களின் வளங்களைப் பயன்படுத்தி உச்ச பயன்களைப் பெற வேண்டும். அதுவே எனது எதிர்பார்ப்பாகும் என மேலும் தெரிவித்தார். (ம-7)


31ம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 05.12.1944
விண்ணில் 20.05.2024

கடந்த 20.05.2024 இறைபதம் எய்திய எமது குடும்ப குல விளக்கு

அமரர்

கதிரவேற்பிள்ளை சரஸ்வதி

மீளாத்துயில் கொண்டு எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றீரோ? கலையாத நினைவுகளுடன் உதிரும் கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகிறோம் தாயே!

(0097)

வத்தனை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719
WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 839 3974
(1261)

புதிய காவலன் திருமண பொருத்துநர்
மாலி சந்தி, அல்வாய் - கோப்பாய்
மணமகள் தேவை
தற்போது கொழும்பில் வேலை பார்க்கும் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் கற்ற Electrical Engineer மாப்பிள்ளைக்கு படித்த அழகிய டொக்டர் Dr மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
பிறந்த திகதி : 05.06.1997
நட்சத்திரம் : ரோகினி
தொடர்பு : 077 663 0273
(C-0615)

புதிய காவலன் திருமண பொருத்துநர்
மாலி சந்தி, அல்வாய் - கோப்பாய்
மணமகள் தேவை
MBA, B.Eng (Hons) Electronic & telecommunication engineer (London Metropolitan University) படித்த Business Development Manager ஆக பணி புரியும் London இல் நிரந்தர வதிவிட விசாவுள்ள மணமகனுக்கு பெற்றோர் உயர்கல்வி கற்ற அழகிய மணமகளை எதிர்பார்க்கிறார்கள். (அவசரம்)
பிறந்த திகதி - 03.04.1985, நட்சத்திரம் மகம்
உயரம் - 5 அடி 10 அங்குலம்
077 663 0273
(C-0614)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பச்சை குத்திக் கொள்வதால் புற்றுநோய் உருவாகும் அபாயம்!

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(சுவீடன்)

**உடலில் பச்சை குத்திக்கொள்வதால், லிம்போமா என்ற இரத்தப் புற்றுநோய் உருவாகும் அபாயம் 21 சதவீதம் வரை இருப்பதாக சுவீடன் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.**



இன்றைய கால இளைஞர்களிடையே, உடலில் பச்சை குத்திக் கொள்ளும் ஆர்வம் அதிகரித்து வருகிறது.

பச்சை குத்திக்கொள்வது உங்கள் தோலில் நிரந்தரமாக இருக்கும்.

ஆனால், ஒரு நபர் எவ்வளவு அதிகமாக மை பூசப்படுகிறாரோ, அந்த அளவுக்கு அவர் ஒரு குறிப்பிட்ட வகை இரத்தப்புற்றுநோயை உருவாக்கும் வாய்ப்பு உள்ளது.

லிம்போமா இரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 2,938 பேர் உட்பட மொத்தம் 11,905 பேர் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர்.

பச்சை குத்தாதவர்களுடன் ஒப்பிடும்போது, புற்றுநோய் செல்கள் வேகமாக வளரும் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இது குறித்து மேலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

# நிதி திரட்டவே வெளிநாடு செல்கிறார் அநுர

## சந்திம சாடல்

(கொழும்பு)



"தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, கட்சியின் நிதி இருப்பினை தக்கவைத்துக் கொள்வதற்காகவே வெளிநாடுகளுக்கு விஜயம் மேற்கொள்வதாக" பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க கட்சியின் நிதி இருப்பினை தக்கவைத்துக் கொள்வதற்காகவே வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்கின்றார்.


அங்கு சென்று இராஜதந்திரிகளுடன் கலந்துரையாடுவதில்லை மாறாக நாட்டின் கல்வித்துறை சுகாதாரத்துறை அல்லது நாட்டின் அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடுவதில்லை.

வெளிநாடுகளுக்கு சென்று அங்கு நிதியினை திரட்டி உள்நாட்டில் சுகபோகமாக வாழ்வதற்காகவே அவர் வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்கிறார்.

இந்த நாட்டை வழிநடத்துவதற்கான சிறந்த தலைவர் யார் என்பதில் வெளிநாடு வாழ் இலங்கையர்களும் சிந்தித்து செயற்பட வேண்டும்.

இவ்வாறான அரசியல் சூழ்ச்சிதாரர்களின் சதித்திட்டங்களுக்கு வெளிநாடு வாழ் இலங்கையர்கள் ஒத்துழைப்பு வழங்க கூடாது என சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். (நி-6)

# தேங்காய் எண்ணெய் விலை அதிகரிப்பு



(கொழும்பு)

தேங்காய் எண்ணெய் போத்தல் ஒன்றின் விலை100 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இதன்படி 450 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் போத்தல் ஒன்றின் விலை தற்போது 550 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் சுங்க வரி அதிகரிப்பே விலை அதிகரிப்பிற்கு காரணம் எனவும் தேசியநுகர்வோர் முன்னணியின் தலைவர் தெரிவித்துள்ளார். (நி-6)



இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்சாலை ஊழியர் நலன்புரிச்சங்கம் நடத்திய ஆண்டுவிழா நிகழ்வில் சிறந்த சாரதி, சிறந்த பொறியியலாளர் விருது பெற்றவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் போக்குவரத்துச்சபை யாழ் சாலை ஊழியர்களின் பிள்ளைகள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையிலும், க.பொ.த. சாதாரண உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். (படம்: சிவசாந்தன்)

# தேர்தலுக்கான வாக்கு பெட்டிகள் தயாரிக்கும் பணிகள் தீவிரம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தேவையான வாக்குப்பெட்டிகளை தயார்படுத்துமாறு அதிகாரிகளுக்கு ஏற்கனவே பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயமாக நடைபெறவுள்ளதால், வாக்குப்பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வாக்குச் சாவடிகள் குறித்த விபரங்கள் கிடைத்தவுடன், வாக்குப் பெட்டிகளில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் உடனடியாக சரிசெய்ய ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

வாக்குப்பதிவுக்காக பயன்படுத்தப்பட்ட ஏராளமான வாக்குப்பெட்டிகள் சேதமடைந்துள்ளதாகவும், அவற்றை அரசு தொழிற்சாலைக்கு அனுப்பிசரி செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தேர்தலை இலக்காகக் கொண்டு அதிகாரிகள் கணக்கெடுப்பு விரைவில் நடத்தப்படும் எனத் தெரிவித்த ரத்நாயக்க, அடுத்த வாரம் உள்ளூராட்சி தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுடன் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளின் தேர்தல் செலவுகள் குறித்தும் அங்கு விவாதிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தல் செப்டம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 வரை நடைபெறும் என தேர்தல் ஆணையம் சமீபத்தில் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தேர்தலை எதிர்கொள்ள தயங்குகிறது அரசாங்கம்

## தேசிய மக்கள் சக்தி

(கொழும்பு)

"தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மீள்பரிசீலனை செய்யப்படும்" என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தேர்தலை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் தயங்குகிறது. அதனாலேயே தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் முயல்கிறது.

நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றால் தற்போதைய ஜனாதிபதி உட்பட அவரது ஆதரவாளர்களும் வீடு செல்ல வேண்டி ஏற்படும். தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் ஆணை கிடையாது.

நாட்டை வீழ்ச்சிப்பாதையில் இருந்து கட்டியெழுப்புவதற்கான எந்தவித வேலைத்திட்டங்களும் அரசாங்கத்திடம் இல்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரி-20 உலகக் கோப்பை

## 'சூப்பர்-8' சுற்று நாளை ஆரம்பம்




அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீஸ் நாடுகளில் நடைபெறும் ரி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் லீக் சுற்றின் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. லீக் சுற்று முடிவுகளிலேயே அதிகம் எதிர்பார்க்கப்பட்ட அணிகள் வெளியேறி அதிர்ச்சி அளித்தன.

இந்த நிலையில், உலகக் கோப்பை தொடரின் சூப்பர் 8 சுற்றுக்கான விறுவிறுப்பு எகிற தொடங்கியுள்ளது. லீக் சுற்றின் முடிவில், சூப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்ற அணிகள் எவை என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுவிட்டது.

லீக் சுற்று போட்டிகளை தொடர்ந்து சூப்பர் 8 சுற்றில் மொத்தம் 12 போட்டிகள் நடைபெற உள்ளன. இதில் முதல் போட்டி நாளை நடைபெற இருக்கிறது. இதில் அமெரிக்கா மற்றும் தென் ஆபிரிக்கா அணிகள் மோதுகின்றன. இதைத் தொடர்ந்து நடைபெற இருக்கும் சூப்பர் 8 சுற்று போட்டிகளின் விவரம் பின்வரு மாறு.


ஜூன் 20 காலை இங்கிலாந்து மற்றும் வெஸ்ட் இண்டீஸ், ஜூன் 20 இரவு ஆப்கானிஸ்தான் மற்றும் இந்தியா, ஜூன் 21 காலை அவுஸ் திரேலியா மற்றும் வங்காளதேசம், ஜூன் 21 இரவு இங்கிலாந்து மற்றும் தென் ஆபிரிக்கா, ஜூன் 22 காலை அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீஸ், ஜூன் 22 இரவு இந்தியா மற்றும் வங்காளதேசம், ஜூன் 23 காலை ஆப்கானிஸ்தான் மற்றும் அவுஸ்திரேலியா, ஜூன் 23 இரவு அமெரிக்கா மற்றும இங்கிலாந்து, ஜூன் 24 காலை வெஸ்ட் இண்டீஸ் மற்றும் தென் ஆபி ரிக்கா, ஜூன் 24 இரவு அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா, ஜூன் 25 காலை ஆப்கானிஸ்தான் மற்றும் வங்காளதேசம்.

சூப்பர் 8 சுற்று முடிவில் அரையிறுதி சுற்றுக்கு நான்கு அணிகள் முன்னேறும். அரையிறுதி சுற்றின் இரண்டு போட்டிகளும் ஜூன் 27 ஆம் திகதியே நடைபெறுகிறது. முதல் போட்டி காலையிலும், இரண்டாவது போட்டி இரவிலும் நடைபெறுகிறது.

அரையிறுதி சுற்றில் வெற்றி பெறும் இரு அணிகள் ஜூன் 29 ஆம் திகதி நடைபெறும் இறுதி போட்டியில் விளையாட உள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-6)

# யூரோ கிண்ண கால்பந்து

## இத்தாலி, நெதர்லாந்து அசத்தல்



"யூரோ" கிண்ண லீக் போட்டியில் இத்தாலி அணி, அல்பேனியாவை 2-1 என வீழ்த்தியது.

ஜேர்மனியில் "யூரோ" கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது. டார்ட்மண்டில் நடந்த "பி" பிரிவு லீக் போட்டியில் இத்தாலி, அல்பேனிய அணிகள் மோதின. பயிற்சியாளர் லூசியானோ ஸ்பாலட்டி வழிநடத்த, இளம் இத்தாலி அணி களமிறங்கியது.

ஆட்டம் தொடங்கிய 23ஆவது விநாடியில் அல்பேனியாவின் நெடிம் பஜ்ராமி மின்னல் வேகத்தில் கோல் அடித்து, இத்தாலிக்கு அதிர்ச்சி கொடுத்தார். இது, 64 ஆண்டு கால "யூரோ கோப்பை வரலாற்றில் அடிக்கப்பட்ட அதிவேக கோல். இதற்கு முன் ரஷ்யாவின் டிமிட்ரி கிரிசென்கோ 67 விநாடிகளில் கோல் (எதிர், கிரீஸ், யூரோ 2004) அடித்திருந்தார்.

தொடக்கத்தில் ஏற்பட்ட சரிவில் இருந்து இத்தாலி விரைவாக மீண்டது. இந்த அணியின் அலெசாண்ட்ரோ பஸ்தோனி (11ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்து பதிலடி கொடுத்தார். தொடர்ந்து நிகோலோ பரேல்லா (16) ஒரு கோல் அடிக்க, முதல் பாதியில் இத்தாலி 2-1 என முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியில் இத்தாலி வசம் தான் பந்து பெரும்பாலும் இருந்தது. ஆனாலும் "பினிஷிங்" இல்லாததால் கூடுதலாக கோல் அடிக்க முடியவில்லை. அல்பேனிய வீரர்களின் முயற்சிகளும் வீணாகின. இறுதியில் இத்தாலி அணி, 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஹாம்பர்க்கில் நடந்த "டி" பிரிவு லீக் போட்டியில் போலந்து, நெதர்லாந்து அணிகள் மோதின. முதல் பாதி 1-1 என சமனில் முடிந்தது. இரண்டாவது பாதியில் இரு அணிகளும் கடுமையாக போராடின. பதற்றமான கடைசி கட்டத்தில் நெதர்லாந்தின் நம்பிக்கை நாயகன் வெகோர்ஸ்ட் (83) ஒரு கோல் அடித்து அசத்தினார். இறுதியில் நெதர்லாந்து 2-1 என்ற கணக்கில் வென்றது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலையாளிகளை நம்ப தமிழர்கள் தயாரில்லை

## அருட்தந்தை மா.சத்திவேல்

(நெளுக்குளம்)

வடகிழக்கு தமிழர்கள் இனப்படுகொலைக்கு முகம் கொடுத்து அதன் வலிகளோடு சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரத்தை சர்வதேசத்திடம் முன்வைக்கையில் 13 என்பதும் 13 பிளஸ் என்பதெல்லாம் தமிழர்களின் வாக்குகளை சிதறிப்பதறடிப்பதற்கே என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு ஜனாதிபதி தேர்தலை எதிர்நோக்கி கொண்டிருக்கையில் தெற்கின் வேட்பாளர்களாக அடையாளப்படுத்திக் கொண்டுள்ளோரில் பிரதானமானவர்களாக கருதப்படுவோர் தமது தேர்தல் களச் சந்தையை வடக்கிலும் விரித்து தமது முகவர்களோடு இரகசிய பேச்சுவார்த்தை நடத்துவதோடு திறந்த வெளியில் ஊடக சந்திப்புகள் நடத்தி வடக்கு கிழக்கு தமிழ் மக்களை மதி மயங்கச் செய்யவும் வாக்கு சாவடிக்குள் அனுப்பவும் முயலுவதாக தோன்றுகிறது. இவர்களின் சதி வலைக்குள் சிக்க வேண்டாம் என தமிழ் தேச உணர்வாளர்களை கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழர்கள் மத்தியில் காணப்படும் அரசியல் புல்லுருவிகள் அகற்றப்பட வேண்டும்.

தெற்கின் பேரினவாத இனப்படுகொலையாளர்களின் அரசியல் முகவர்கள் அரசியலில் இருந்து நீக்கப்பட்டு அவர்களின் முகாம்களும் தமிழரின் தேசத்திற்கு வெளியே தள்ள வேண்டும். இல்லையேல் ஜனாதிபதி தேர்தல் மட்டுமல்ல எதிர்காலமே முள்ளிவாய்க்காலாக அமையலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-299)

# 2500 பட்டதாரி ஆசிரியர்களுக்கு விரைவில் நியமனம்-சுசில்

(கொழும்பு)

எதிர்வரும் ஜுலை மாதம் முதல் வாரத்தில் சுமார் 2500 பட்டதாரி ஆசிரியர் நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாத்தாண்டிய பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே கல்வி அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கணிதம்,ஆங்கிலம், இரசாயனவியல், பௌதீகம், உயிரியல், சிங்களம், தமிழ் ஊடகம் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் வெளிநாட்டு மொழிகளிலும் சுமார் 2500 பட்டதாரி ஆசிரியர் நியமனங்களை எதிர்வரும் ஜுலை மாதம் முதல் வாரத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை, மூன்று ஆண்டுகளுக்குள் நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளும் டிஜிட்டல் மயமாக்கப்படும்.

எனவே,ஆசிரியர்கள் இதற்குத் தயாராக வேண்டும் எனவும் ஆசிரியர் பயிற்சி தொடர்பான ஆசிரியர் கையேடு நிபுணர்களால் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் ஆரம்பச் சுற்றில் 7500 ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (நி-6)

# ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கும் தம்மிக்க

## நிபந்தனைகளை முன்வைத்துள்ள மொட்டுக்கட்சி



(கொழும்பு)

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியானது ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்கு தம்மிடம் பத்து நிபந்தனைகளை முன்வைத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரும் வர்த்தகருமான தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைகாட்சிக்கு வழங்கிய விசேட நேர்காணலில் இதனை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தற்போது அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 51% வாக்குகளைப் பெறுவது உறுதியானால், பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தான் போட்டியிடுவேன் என பதில் வழங்கியுள்ளதாக தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 115 நாட்களே உள்ளதால், ஏனைய நிபந்தனைகள் அனைத்தும் எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-6)





யாழ்.போதனா மருத்துவமனை மற்றும் கிறீன் லேயர் அமைப்பினரால் ஊர்காவற்றுறை பிரதான வீதியின் இரு பக்கங்களிலும் மரங்கள் நாட்டி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் யாழ்.இந்திய துணைத் தூதரக முன்னாள் அதிகாரி நடராஜன், யாழ்.போதனா மருத்துவமனை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி உள்ளிட்ட சிலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்: சிவசாந்தன்)

# இராசிபலன்

18.06.2024
ஆனி 04 செவ்வாய்கிழமை
துவாதசி முழுவதும்

சுவாதி பிற்பகல் 3.38 மணிவரை
சுபநேரம் 10.23-11.53 மணிவரை
இராகுகாலம் 2.53-4.23 மணிவரை

சந்திராஷ்டமம்.
பூரட்டாதி, உத்திரட்டாதி.

வளவன்

**மேஷம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், போசனசுகமுண்டு, பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும்.

**மிதுனம்** புண்ணியகாரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**சிம்மம்** உறவினர் நண்பர்கள் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கன்னி** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், உடல் நலன் சிராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

**துலாம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், ஆழ்ந்த சிந்தனையுண்டு, சான்றோர்கள் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்கள் நிறைவேற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவான நாள்.

**தனுசு** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, அதிஷ்ட வாய்ப்புக்கள் கிடைக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், பெரியவர்களால் பெருமைகள் வந்து சேரலாம், செய் தொழில் மேன்மையுண்டு, கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கும்பம்** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பிரிய மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்** குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசி விட்டு பின் மனம்வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், உடல் நலனில் கவனம் தேவை.

மூடநம்பிக்கை மனவலிமை இல்லாதவர்களின் மதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய படகுகளின் அத்துமீறலை கண்டித்து யாழில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**இந்திய இழுவை மடி படகுகளின் அத்துமீறல் செயற்பாட்டை தடுத்து நிறுத்தக் கோரி இன்று யாழில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டு தொழிலாளர்கள் போராட்டம்.**

யாழ். கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங் களின் சம்மேளனத்தின் அலுவலகத்தில் நேற்று நடை பெற்ற ஊடக சந்திப்பில் இது தொடர்பிலான அறிவிப்பு வெளி யிடப்பட்டது.

கடற்றொழிலாளர் கூட்டுற வுச் சங்க சமாசங்களின் சம் மேளனத்தின் தலைவர் சிறீ கந்தவேல் புனித பிரகாஸ் கருத்து தெரிவிக்கையில்,

இந்திய இழுவை மடி படகு களின் அத்துமீறல் செயற்பாடு எமது கடற்பகுதிகளில் அரங் கேறி வருகிறது. இதனால் எமது கடற்றொழிலாளர்கள் பெருமளவு பாதிப்பை எதிர் கொள்கின்றனர்.

இந்நிலையில் காலை 10 மணிக்கு இந்திய துணைத் தூதரகத்திற்கு முன்பாக முன் னெடுக்கவுள்ள போராட்டத் திற்கு அனைத்து கடற் றொழிலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக் கப்பட்டுள்ளது. (நி-6-33)

# தங்கம்மா அப்பாக்குட்டியின் 16 ஆவது ஆண்டு குருபூசை நாளை

(யாழ்ப்பாணம்)

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்கா துரந்தரி பண் டிதை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ் தான முன்னாள் பெருந்தலை வர் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பதினாறா வது ஆண்டு ஆனி மாத விசாக குருபூசை தினம் நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை, ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் இடம் பெறவுள்ளது.

துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர், கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை பேரா சிரியர் ச. முகுந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோவில் இராமசூரிய பிரபாகர குருக்கள், மாதகல் சாந்த நாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலய இரத்தின ஐயர் மாணிக் கவாசகக் குருக்கள் ஆகியோர் மூத்த சிவாசாரியார்களாக கௌரவிக்கப்பட்வுள்ளமை குறிப் பிடத்தக்கது. (நி-6-33)



நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த திருவிழாவின் 10 ஆம் திருவிழாவான மஞ்சத் திருவிழா நேற்று முன்தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)


# 18 கிலோ கேரளக் கஞ்சாவுடன் அல்லைப்பிட்டியில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 18 கிலோ கேரளா கஞ்சாவுடன் நபர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடி படையினர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

அல்லைப்பிட்டி பகுதியில் கேரளா கஞ்சா பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தக வலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் 18 கிலோ கஞ்சாவை மீட்டுள்ள னர். அவற்றைப் பதுக்கி வைத் திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய் துள்ளனர். கைது செய்யப்பட்ட நபரையும் மீட்கப்பட்ட கஞ்சா வையும் மேலதிக சட்ட நடவடிக் கைக்காக ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப் படைத்துள்ளனர். (நி-33)

# கடலில் மிதந்து வந்த மர்ம பெட்டி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடலில் அடித்து வரப்பட்டு கரையொ துங்கிய மர்ம பெட்டி ஒன்றில் இருந்து தொலைத்தொடர்பு சாதனம் மீட்கப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டி கடற்பரப்பில் மிதந்து வந்த மர்ம பெட்டி ஒன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கரையொ துங்கியுள்ளது.

அது தொடர்பில் ஊர்காவற் துறை பொலிஸாருக்கு அறி விக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் கரையொதுங்கிய பெட்டியை திறந்து பார்த்த வேளை அத னுள் தொலைத்தொடர்பு சாத னம் ஒன்று காணப்பட்டுள்ளது.

அதனை மீட்டு பொலிஸ் நிலையம் எடுத்து சென்றுள்ள பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டுள்ள னர். (நி-33)

# தப்பித்து சென்ற கைதி போதைப் பொருளுடன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் நிலையத் திலிருந்து தப்பித்துச் சென்ற கைதியொருவர் போதைப் பொருளுடன் கிளிநொச்சிப் பகு தியில் கைது செய்யப்பட்டுள் ளார். கிளிநொச்சி அக்கராயன் காட்டுப்பகுதியில் உள்ள வீடொ ன்றில் பதுங்கியிருந்தபோது குறித்த நபர் யாழ். பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரி வின ரால் நேற்று முன்தினம் கைது நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது குறித்த நபரிட மிருந்து 3.800 கிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற் றப்பட்டதுடன், மேலதிக விசார ணைக்காக பொலிஸாரிடம் குறித்த நபர் ஒப்படைக்கபட்டார்.

கடந்த மே மாதம் 12 ஆம் திகதி குறித்த கைதி யாழ். பொலிஸ் நிலையத்தில் விசார ணைக்காக தடுத்து வைக்கப்பட் டிருந்த போது பொலிஸ் நிலை யத்திலிருந்து தப்பிச் சென்றி ருந்தார். இதன் காரணமாக இரண்டு பொலிஸ் உத்தியோ கத்தர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருந்தனர்.

அதேவேளை இவர் யாழ் மாவட்டத்தில் பல குற்றச் செயல்களுக்காக நீதிமன்றங்க ளினால் திறந்த பிடியாணை விதிக்கப்பட்டவர் என்பது குறிப் பிடத்தக்கது. (நி-6-33)

# நல்லை ஆதீனத்தில் கற்கைநெறி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலு வல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் கற்கை நெறி வகுப்புக்கள் ஆரம்ப மாக வுள்ளது.

இதில் அறநெறி, பண் ணிசை, சங்கீத, நடன, நாடக, வர்மக்கலை, யோகாசனம் மற் றும் இசை வாத்தியக் கருவிக ளின் வகுப்புக்கள் ஆகியன ஆரம்பமாகவுள்ளதால் கற்கை நெறிகளை பயில விரும்புபவர் கள் மற்றும் பாடநெறிகளுக்கு வளவாளர்கள் வேண்டப்படுவ தால் துறைசார் அனுபவம் உள் ளவர்கள் எதிர்வரும் 01.07. 2024 வரை பதிவு களை வட மாகாண பிராந்திய அலு வலகம், இந்து சமய, கலா சார அலுவல்கள் திணைக் களம், நல்லூர் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் எனும் முக வரியில் உள்ள அலுவலகத் திற்கு நேரடியாக வந்தும் பதி வுகளை மேற்கொள்ள முடி யும்.

மேலதிக தகவல்களை 077 582 1041 எனும் தொலை பேசி இலக்கத்தினூடாக பெற் றுக் கொள்ள முடியும். (நி-6-33)




சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலையமும், சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்விப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இணைந்து மேற்படி கல்வி நிலையத்தில் கல்வி கற்று உயர்தரத்தில் சித்தியெய்திய மாணவர்களுக்கும், பல்கலைக்கழக பட்டத்தை நிறைவு செய்த மாணவர்களுக்குமான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் கலைமகள் இலவசக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. (படம் -சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் ஆட்சிக்கு வந்தாலும் தனித்து சாதிக்க முடியாது

## தேரர் எச்சரிக்கை

**(கொழும்பு) எதிர்காலத்தில் யார் ஆட்சிக்கு வந்தாலும் எந்தவொரு தலைவராலும் தனித்து சாதிக்க முடியாது என தேசிய நாமல் உயன அமைப்பின் ஸ்தாபகர் வனவாசி ராகுல தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



நாமல் உயன வளாகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகள், அரசியல் அதிகாரத்தை ஒவ்வொரு தனி நபரின் கையில் எடுக்க முயலாமல், தனித்து செல்லாமல், சிங்கள, தமிழ், முஸ்லிம் கட்சிகள் அனைத்தையும் ஒரே மேசையில் கூட்டி தேசிய அரசாங்கத்தை அமைக்க வேண்டும்.

இப்போது, ஒரு தேர்தல் நெருங்கிவிட்டதாகத் தெரிகிறது. 225 அரசியல்வாதிகளில், ஒவ்வொருவரும் கூட்டணி அமைத்து, கட்சி மாறத் துடிக்கிறார்கள்.

நாட்டின் மற்றும் அதன் மக்களின் நலனுக்காக இதைச் செய்வதாக அவர்கள் கூறுகின்றனர்.

கட்சி நலன்களையும் தனிப்பட்ட ஆதாயங்களையும் புறந்தள்ளிவிட்டு அரசியல்வாதிகள் அனைவரும் ஒன்றிணைந்து தேசிய அரசாங்கத்தின் மூலம் இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும்.

நாட்டில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. அதாவது ஒரு சாதாரண மனிதனால் வாழ முடியாது.

ஒரு பள்ளி புத்தகத்தின் விலை எவ்வளவு? மருந்தகத்திற்குச் சென்று மருந்துகளின் விலை எவ்வளவு? ஒரு ஏழை எப்படி மருந்து வாங்க முடியும்? வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது மற்றும் நாடு கடனில் உள்ளது.

அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் இந்நிலையை மாற்ற வேண்டும் . அதைத் தவிர்த்து, யார் ஆட்சிக்கு வந்தாலும், இந்த நாட்டை இங்கிருந்து கட்டியெழுப்புவதற்கான அமைப்பு இந்த நாட்டில் எவருக்கும் இல்லை என தேரர் தெரிவித்துள்ளார். (நி-6)


## சேவை நலன் பாராட்டு

உயர்திரு

**பொன்னையா ரவிச்சந்திரன்** SLEAS-I

வலயக்கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்



**சேவை விபரம்**

ஆசிரிய நியமனம்

யா/அராலி சரஸ்வதி மகா வித்தி. (17.08.1988)

யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம்.

யா/வட்டு. திருநாவுக்கரசு வித்தியாலயம்.

யா/வட்டு. இந்துக் கல்லூரி.

கல்வி நிர்வாக சேவை நியமனம்

- பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) வலிகாமம் கல்வி வலயம். (12.03.2007)
- பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி தென்மராட்சி கல்வி வலயம். (2008)
- பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி பொது நிர்வாகம் தாபனம்) வலிகாமம் கல்வி வலயம் (2012)
- பிரதிக்கல்விப் பணிப்பாளர் (பொது நிர்வாகம்) வடமாகாணக் கல்வித் திணைக்களம். (2016)
- வலயக்கல்விப் பணிப்பாளர், துணுக்காய் கல்வி வலயம். (2016)
- பிரதிக்கல்விப் பணிப்பாளர், (பொது நிர்வாகம் தாபனம்) யாழ்ப்பாணம் கல்வி வலயம். (2019)
- வலயக்கல்விப் பணிப்பாளர், தீவக கல்வி வலயம். (2019)
- வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம். (2021)
- வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் கல்வி வலயம் (2023)

Congratulations

முப்பத்தாறாண்டு கால தளராத சேவைதனில் ஆசிரியராய், பிரதிக்கல்விப் பணிப்பாளராய், வலயக்கல்விப் பணிப்பாளராய் ஆற்றிய சேவைகளை மனதாரப் பாராட்டி ஓய்வு காலம் இனிதாய் அமைய வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக நலன்புரிச்சங்கம்


# சஜித்துடன் இணைந்தார் மொட்டு எம்.பி

(கொழும்பு)

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.பி.எஸ். குமாரசிறி ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ரஜரட்ட விவசாயிகள் மாநாடு நேற்று முன்தினம் பிற்பகல் அனுராதபுரம் சல்காடு விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதன்போதே அவர் சஜித் முன்னிலையில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார். (நி-6)



மருதங்கேணி, கரவெட்டி பிரதேச செயலக பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெற்றது. (படம் மகாலிங்கம்)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



20.02.2020 தொடக்கம் 18.06.2024 வரை வல்வெட்டித்துறை சமுர்த்தி வங்கியின் முகாமையாளராக அரும் பணியாற்றிய எம் அன்புக்குரிய

திரு. **பொன் குகதாஸ்**

(முகாமையாளர் சமுர்த்தி வங்கி, வல்வெட்டித்துறை)

அவர்கள் பணி இடமாற்றம் பெற்றுச் செல்லும் இவ்வேளையில் அவரின் அளப்பரிய சேவையை பாராட்டி வாழ்த்துவதுடன் அவரின் மக்கள் சேவை மேலும் தொடர வேண்டும் என இறைவனை வேண்டுகின்றோம்

(சி-612)

வாழ்த்துவோர்

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி வங்கி, வல்வெட்டித்துறை.



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1986 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>கி.பா:33 3/4<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:Land officer(gov)<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/7838 | பிறப்பு- 1976 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 36<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம், சொந்த தொழில் புரிவோர்<br>தொ.இ: G/4092 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 65<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: Technical Assistant (New Zealand)<br>எதிர்பார்ப்பு- பட்டதாரி மணமகள் (IT பட்டதாரி)<br>தொ.இ: B/8976 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA Management Assistant<br>எதிர்பார்ப்பு: Engineer, Lecturer, Accountant, Lawyer<br>தொ.இ: G/9917 |
| பிறப்பு: 1994 RC<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: LLB, Banker<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், ஆசிரியர் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/13181 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 45 1/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA, DO(gov)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/11011 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை


விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# தெற்கு காசாவில் போர் நிறுத்தம்
# இஸ்ரேல் இராணுவம் அறிவிப்பு



(காசா)

தெற்கு காசாவில் மனிதாபிமான உதவிக் குழுக்கள் உள் நுழைவதற்கு அனுமதி வழங்கியுள்ள இஸ்ரேல் இராணுவம், தமது இராணுவ நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அறிவித்துள்ளது. காசா பகுதியை இஸ்ரேலில் இருந்து பிரிக்கும் கெரெம் ஷாலோம் எல்லைப் பகுதியில் மட்டுமே போர் நிறுத்தம் அமுலில் இருக்கும் என்றும் இஸ்ரேல் குறிப்பிட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புகளுடன் கலந்துரையாடிய பின்னரே தற்காலிகமாக யுத்தத்தை நிறுத்தும் தீர்மானத்திற்கு இஸ்ரேல் முன்வந்துள்ளதாக ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

எவ்வாறாயினும், தெற்கு காசா பகுதியில் உள்ள ரஃபாவில் இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என்று இஸ்ரேலிய இராணுவம் அறிவித்தது. (நி)

# தென்சீனக் கடலில் புதிய சட்டம்
## அமுல்படுத்திய சீனா




(பீஜிங்)

தென் சீனக் கடல் பகுதியில் சீனா புதிய சட்டமொன்ற அமுல் படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த புதிய சட்ட விதிமுறைகளின்படி, எல்லை நுழைவு மற்றும் வெளியேறும் நிர்வாகத்தை மீறியதாக சந்தேகிக்கப்படும் வெளிநாட்டவர்களைத் தடுத்து வைக்க முடியும்.

அதன்படி, அவர்கள் 60 நாட்கள் வரை சீனக் கடலோரக் காவல்படையினரால் காவலில் வைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும் சீனாவின் பிராந்திய கடல் மற்றும் அருகிலுள்ள கடல் பகுதிக்குள் சட்டவிரோதமாக நுழைந்த வெளிநாட்டுக் கப்பல்களும் தடுத்து வைக்கப்படலாம் எனவும் குறித்த புதிய சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு கடும் கண்டனம் வெளியிட்டுள்ள பிலிப்பைன்ஸ், சீன கடலோர காவல் படையின் நடவடிக்கைகள் காட்டு மிராண்டித்தனமானது எனவும், மனிதாபிமானமற்றது எனவும் விமர்சித்துள்ளது.

தென் சீனக் கடல் பகுதி முழுவதும் தங்களுக்கு சொந்தமானது என தெரிவித்து வரும் சீனா, அந்த கடல் பகுதியில் செயற்கையாக உருவாக்கப்பட்ட தீவுகளை அமைத்துள்ளது.

இதற்கு பிலிப்பைன்ஸ், புருனே, மலேசியா, தாய்வான், வியட்நாம் ஆகிய நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

மேலும், தென் சீன கடல் பகுதியில் பிலிப் பைன்ஸ் நாட்டு கப்பல்கள் அத்துமீறி நுழைவதாக கூறி சீனா அடிக்கடி தாக்குதலும் நடத்தி வரு கிறது.

இந்த நிலையிலேயே தென் சீனக் கடல் பகுதியில் சீனா புதிய சட்டத்தை அமுல்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பங்களாதேஷில் ரயில்கள் மோதி விபத்து
# 13 பேர் உயிரிழப்பு-30 பேர் காயம்

(டாக்கா)

மேற்கு வங்கத்தில் இரு ரயில்கள் மோதிக் கொண்டதில் 13 பயணிகள் உயிரிழந்துள்ளதுடன் 30 பேர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




மேற்கு வங்க மாநிலம் டார்ஜிலிங் மாவட்டத்திலுள்ள ரங்காபாணி என்ற ரயில் நிலையத்தை நோக்கி பயணித்த, 'கஞ்சன் ஜங்கா எக்ஸ்பிரஸ்' என்ற பயணிகள் ரயிலானது சிக்னல் கிடைக்காமையினால் நிறுத்தப்பட்டிருந்தது.

இதன்போது, குறித்த ரயில் நிறுத்தப்பட்டிருந்த அதே தண்டவாளத்தில், வேகமாக வந்த சரக்கு ரயிலொன்று கஞ்சன்ஜங்கா எக்ஸ்பிரஸ் ரயிலின் பின்னால் அதி வேகமாக மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில், கஞ்சன்ஜங்கா எக்ஸ்பிரஸ் ரயிலின் 3 ரயில் பெட்டிகள் பலத்த சேதமடைந்த நிலையில், பயணிகள் 13 பேர் உயிரிழந்துள்ளதுடன் 30 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

காயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி-6)

# கடும் ...
# மக்காவி...

(ஜெத்தா)

**சவுதி அரேபிய...**
**அலைகாரணமாக...**
**உயிரிழந்துள்ளதா...**
**வித்துள்ளது.**

ஜோர்டானை சேர்ந்த 14 யாத்ரீகர்கள் மற்றும் ஈரானைச் சேர்ந்த 5 பேர் என மொத்தம் 19 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் சவுதி அரேபியாவில் வெப்பம் அதிகரித்து காணப்படுவதாகவும், மக்காவில் 48 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் பதிவாகி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இராணுவ வாகனம் மீது ...
# 8 சோமாலியா ...



(சோமாலியா)

சோமாலியாவில் இராணுவ வாகனத்தைக் குறிவைத்து நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் 8 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.


ஆபிரிக்க நாடான சோமாலியாவில் பல்வேறு பயங்கரவாதக் குழுக்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்ற நிலையில் அவர்களை கட்டுப்படுத்த அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது. எனினும் தாக்குதல் சம்பவங்கள் குறைந்த பாடில்லை.

இந்நிலையில், சோமாலியாவின் தென்மேற்கு பகுதியிலுள்ள பைடோவா நகரிலிருந்து பெர்டேல் நகருக்கு சென்ற இராணுவ வாகனங்களை குறிவைத்து வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம் வெப்பம் காரணமாக
# வில் 19 யாத்திரிகர்கள் உயிரிழப்பு

ரேபியாவில் நிலவும் கடும் வெப்ப
ணமாக 19 வெளிநாட்டு யாத்திரீகர்கள்
ள்ளதாக அந் நாட்டு அரசாங்கம் அறி
வி.



14
னச்
தம்
ந்து
டுள்

ரேபி
த்து
வில்
ரை
வும்

இதனையடுத்து வெப்பத் தாக்கத்தினை எதிர்கொள்ள கூடிய வகையிலான மருத்துவ குழு வினர் உள்ளிட்ட 1600 இராணுவ வீரர்களை சவுதி இராணுவம் மக்காவிற்கு அனுப் பியுள் ளது.

அத்துடன், 30 விசேட குழு வினரும் ஐயாயிரம் சுகாதார மற்றும் முத லுதவித் தன்னார்வ லர்களும் அனுப்பி வைக்கப்பட் டுள்ளதாக சவுதி அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், ஜெத் தாவில் உள்ள சவுதி அதி காரிகளுடன் இணைந்து உயிரிழந்தவர்களின் உடல் களை ஜோர்டானுக்கு அனுப்புவதற்கான பணி களை ஜோர்டான் அரசாங் கம் முன்னெடுத்துள்ளதா கத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


மக்காவிற்கு புனிதப் பயணம் வந்துள்ள 2,760 பேர் வெப்ப அலையால் பாதிக்கப் பட்டுள்ளதால், பலி எண் ணிக்கை மேலும் அதி கரிக்கக் கூடும் என அஞ் சப்படுகிறது.

எனவே, பயணிகள் கவனமாக இருக்க வேண் டும் என அந்நாட்டு சுகா தாரத்துறை அறிவுறுத்தி யுள்ளது.

ஆண்டுதோறும் நடை பெறும் ஹஜ் புனித யாத் திரை கடந்த வெள்ளிக் கிழமை ஆரம்ப மானது.

இதற்காக 15 இலட்சம் பக்தர்கள் சவுதி அரேபியா விலுள்ள புனித நகரமான மக்காவிற்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ரி)

## ம் மீது குண்டுத்தாக்குதல்
## யா வீரர்கள் பலி



னுவ
த்தப்
ல் 8
துள்
தெரி

வில்
க்கள்
ன்ற
டுப்ப
ான
ண்டு
தல்
லை.
ரியா
ள்ள
டேல்
வாக
வெடி
ப்பட்


அதாவது, இராணுவ வீரர்க ளின் வாகனங்கள் பயணித்த வீதியில், வெடிகுண்டை புதைத்து வைத்த பயங்கரவாதிகள் இரா ணுவ வாகனம் பயணிக்கையில் வெடிகுண்டை வெடிக்கச் செய்துள் ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதில், ஒரு வாகனம் வெடித்துச் சிதறியதில், இராணுவத் தளபதி முகமது தேரே உட்பட 8 பேர் உயி ரிழந்துள்ளதுடன், மேலும் 11 பேர் படுகாயம் அடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

படுகாயமடைந்தவர்கள் மீட்கப் பட்டு வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ள நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தத் தாக்கு தலுக்கு அல் கொய்தாவுடன் தொடர் புடைய அல்-ஷபாப் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி-6)

# உலகின் மிக வயதான பெண் ரயில் ஓட்டுநர்





(வோஷிங்டன்)

வயது என்பது வெறும் நம்பர் தான் என்பதை நிரூபித்த பலரின் உதார ணங்களை நாம் கேள்விப் பட்டிருப்போம். அந்த வகை யில் உலகின் வயதான ரயில் ஓட்டுநர் என்ற பெரு மையை அமெரிக்காவைச் சேர்ந்த 81 வயது மூதாட்டி ஒருவர் பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் பாஸ் டன் நகரத்தில் உள்ள மஸசுசெட்டில் வாழும் ஹெலன் ஆண்டெனுச்சி என்ற 81 வயது மூதாட்டி அந்நகரின் மஸசுசெட் போக்குவரத்து நிறுவனத் தின் சார்பில் இயக்கப்படும் ரயிலில் ஓட்டுநராக பணி யாற்றி வருகிறார்.

கடந்த 1995 ஆம் ஆண்டு தனது 53ஆவது வயதில் ரயில் ஓட்டுநராக தனது பணியைத் தொடங் கிய ஹெலன் தற்போது வரை ஓய்வு ஒழிச்சலின்றி சுறுசுறுப்பான தேனியைப் போல் தனது பணியைத் தொடர்ந்து செய்து வருகி றார்.

இவரின் சக ஊழியர் கின்னஸ் சாதனைக்கு இவ ரது பெயரை விண்ணப் பித்ததை அடுத்து உலகின் மிக வயதான ரயில் ஓட்டுநர் என்று கின்னஸ் சாதனை அங்கீகாரம் பெற்றுள்ளார் ஹெலன்.

தனக்கு கிடைத்த அங் கீகாரம் குறித்து ஹெலன் பேசுகையில், இந்த ஆர வாரம் எல்லாம் எதற்கு என்று தெரியவில்லை. எனக்கு 5 குழந்தைகள் உள்ளன. எனவே கொஞ் சம் நிம்மதிக்காகவும், அமைதிக்காகவும் வீட்டை விட்டு வெளியே வர இந்த வேலையை செய்யத் தொடங்கினேன். இப் போதைக்கு பணி ஓய்வு பெறும் திட்டம் எதுவும் என்னிடம் இல்லை என்று தெரிவித்துள்ளார். ஹெல னுக்கு விரைவில் 82 ஆவது பிறந்தநாள் வர உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத சிகரெட்டுகளுடன் கொழும்பில் ஒருவர் கைது



(கொழும்பு)

சுங்க வரி செலுத்தாமல் சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட சிகரெட்டுகளுடன் சந்தேக நபரொருவர் பொலிஸ் விசேட அதிர டிப்படையினரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கைது செய்யப்பட் டுள்ளார். பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் சந்தேக நபர் கொழும்பு 10 பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட் டுள்ளார். கொழும்பு, மாளி காவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயது டைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார். சந் தேக நபரிடமிருந்து சட்ட விரோதமாகக் கொண்டு வரப்பட்ட 75 ஆயிரம் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட் டுள்ளன. இதனையடுத்து சந்தேக நபர் மேலதிக விசா ரணைகளுக்காக பொலிஸ் நிலையத்தில் ஒப்படை க்கப்பட்டுள்ளார். (நி-6)



உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமிய மக்களால் ஹஜ் பெருநாள் கொண்டாடப்பட்டு வருகின்ற நிலையில் மன்னார் மாவட்டத்திலும் இஸ்லாமியர்களால் ஹஜ் பெரு நாள் நிகழ்வுகள் நேற்று திங்கட்கிழமை சிறப்பாக மேற் கொள்ளப்பட்டுள்ளன. (படம்:ஜோசப்நயன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 300 | 300 | 250-450 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 200 | 150-220 | 200 |
| தக்காளி | 700 | 600 | 600 | 600 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 150 | 140 | 120 | 200 |
| கோவா | 300 | 340 | 250 | 250 | 320 |
| கரட் | 350 | 450 | 500 | 320 | 500 |
| பூசணி | 180 | 150 | 150 | 150 | 200 |
| புடோல் | 300 | 300 | 250 | 200 | 300 |
| வாழைக்காய் | 180 | 150 | 120 | 120-150 | 200 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 300 | -- | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 250 | 250 |
| பாகற்காய் | 800 | 800 | 1200 | 700 | 1200 |
| வெண்டக்காய் | 200 | 300 | 200 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 350 | 200 | 250-350 | 300 |
| லீக்ஸ் | 700 | 650 | 600 | 400 | 800 |
| பீற்றூட் | 800 | 600 | 700 | 300 | 800 |
| கறிமிளகாய் | 700 | 750 | 500 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 600 | 700 | 450 | 200-500 | 800 |
| போஞ்சி | 800 | 950 | 700 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 250 | 300 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 140 | 120 | 120-150 | 150 |
| தேசிக்காய் | 800 | 1000 | 1000 | 900 | 1300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 500 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | 600 | 450 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 180 | 250 | 200 | 100 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 300 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 90 | 80 |
| ஈரப்பலா | 160 | 180 | 120 | 80 | 250 |

# இன்று ஒரு தகவல் 156



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கல்லீரல்

ஒரு பேருந்து தரிப்பிடத்தில் காத்துக்கொண்டு இருக்கிறீர்கள். வழக்கம் போல பேருந்து வருகிறது வழக்கம் போல கொஞ்ச தூரம் தள்ளிப் போய் நிக்கிறது. நீங்களும் வழக்கம் போல குடுகுடு என்று ஓடிப் போய் ஒரே தாவா தாவி படியிலே ஏறி கம்பியை புடித்துக் கொள்ளுகிறீர்கள். உடனே ஏதோ ஒரு ஒலிம்பிக் பந்தயத்திலே ஜெயிச்சது மாதிரி ஒரு வெற்றிக் களிப்பு. உங்கள் முகத்திலே! இதற்காக நீங்கள் மட்டும் பெருமைப்பட்டுக் கொள்வது அவ்வளவு நன்றாக இல்லை!

உங்கள் உடம்பிற்குள்ளே இருக்கிற கல்லீரலுக்கும் அதிலே பங்கு உண்டு. நீங்கள் பேருந்தை பிடிக்க ஓடும் போது உங்கள் தசைகளுக்கு சக்தி தேவைப்படுகிறது. அந்த சக்தியைக் கொடுப்பதற்கு எரிபொருள் தேவைப்படுகிறது. அதற்காக கல்லீரலுக்குத்தான் விண்ணப்பம் போட வேண்டும். அது சும்மா இருக்கிறதில்லை... 24 மணி நேரமும் கிளை கோஜன் என்கிற மாச்சத்தை கையிருப்பிலே வைத்து இருக்கிறது. அதிலே கொஞ்சத்தை எடுத்து குளுக்கோஸாக மாற்றி இரத்தக் குழாய்கள் மூலமாக தசைகளுக்கு அனுப்புகிறது. அதனாலே நீங்கள் தாவிப் பிடித்து பேருந்தில் ஏறி விடுகிறீர்கள். இல்லை என்றால் முடியுமா? நின்ற இடத்திலேயே நின்று கொண்டு இருக்க வேண்டியது தான்!

கல்லீரலுக்கு இது மட்டும் தான் வேலை என்று நினைக்காதீர்கள். அது என்னென்ன செய்து கொண்டு இருக்கிறது என்பதை இன்னமும் முழுவதுமாக யாரும் கண்டுபிடிக் கவில்லை. ஒவ்வொரு வினாடியும் கல்லீரல் செய்கின்ற இரசாயன ஜால வித்தைகளை கற்பனை செய்து பார்ப்பது கூட கஷ்டமாம்!

இதுவரைக்கும் அது செய்கின்ற 500 இற்கும் மேற்பட்ட வேலைகளை கண்டுபிடித்து இருக்கிறார்களாம்! இன்னமும் புதிதாக கண்டுபிடித்து கொண்டு இருக்கிறார்களாம். காலையிலே சாப்பிடுகிறீர்கள். ஆகாரம் வயிற்றுக்குள்ளே போகிறது. உடனே கல்லீரலிலே பல சிக்கலான இரசாயன வினைத் தொடர்கள் நிகழ ஆரம்பிக்கும்.

கல்லீரலிலேயிருந்து புறப்பட்டு பித்தநீர், சிறுகுடலுக்கு வருகிறது. கொழுப்பு சத்துக்களை ஜீரணம் செய்ய உதவுகிறது. சிறுகுடலிலே இருக்கின்ற என்சைம்கள் கொழுப்பை கொழுப்பு அமிலமாக மாற்றுகிறது. அது எல்லாம் கல்லீரலுக்கு உள்ளே போகிறது. அங்கே உடல் கொழுப்பாக மாற்றப்படுகிறது.அதற்குள்ளே இரப்பையிலும் சிறுகுடலிலேயும் புரதங்கள் அமினோ அமிலங்களாக மாற்றப்படுகிறது. அந்த அமினோ அமிலங்களை கல்லீரல் பிளாஸ்மா புரதங்களாக மாற்றுகிறது.அவையெல்லாம் உடம்பில் திசுத்தசைகள் உருவாகு வதற்கு தேவை. புரதம் ஜீரணிக்கப்படும் போது அமோனியம் என்கின்ற நச்சுப் பொருள் உண்டாகிறது. கல்லீரல் மறுபடியும் தலையிட்டு அமோனியாவை யூரியாவாக மாற்றுகிறது. இந்த யூரியாவை சிறுநீரகங்கள் வெளியேற்றி விடும்.

மனிதன் உட்கொள்கின்ற அற்ககோல், நிகோடின், போதை மருந்துகள் இது மாதிரியான நச்சுக்களை சிதைத்து அதோடு கேடு விளைவிக்கின்ற தன்மையை குறைக்கிறது கல்லீரல் தான். இப்படி கல்லீரல் எப்பவும் ரொம்ப பிஸி! நமது உடம்பிலே இருக்கின்ற சுரப்பிகளிலேயே கல்லீரல் தான் மிகவும் பெரிது.

இதயம் இருக்கிறதே இது தன்னுடைய சக்தியிலே கால் பங்கை கல்லீரலுக்கு சப்ளை செய்வதிலேயே செலவு செய்து விடுகின்றது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். நுரையீரலுக்கு மட்டும் தான் கல்லீரலை விட அதிக இரத்தம் போகிறது.

இப்போது நமது உடம்பிலே இரத்தத்தின் அளவு கூடிப் போகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். இதயத்திற்கு வேலைச்சுமை அதிகமாகிவிடும். அளவுக்கு மீறி போய் இரத்தம் செலுத்துகின்ற இயக்கமே தடைப்பட்டுப் போற நிலைமை வந்துவிட்டது என்றால். கல்லீரல் தன்னுடைய கொள்ளளவை பெரிதாக்கி விடும். அதிகபடியாக உள்ள இரத்தத்தை அதற்குள்ளே சேமித்து வைத்து இருக்கும். நமது உடம்பிற்கு கல்லீரல் மிகவும் முக்கியமான உறுப்பு அதனாலே அது தனக்கு ஏற்படுகின்ற சேதங்களை தானே சரி செய்து விடும்.

சில புற்று நோயாளிகள் உடம்பிலே இருந்து 90 சதவீதம் வரைக்கும் கல்லீரலை அறுத்து எடுத்து இருக்கிறார்கள். ஆனால் பாருங்கள் ஒரு சில மாதத்திற்குள் அது தானே வளர்ந்து இயல்பான அளவுக்கு வந்து விடுகிறது.

மிகவும் கடுமையான சேதம் ஏற்பட்டால் கல்லீரல் எனக்கு கோளாறு என்று வெளியிலே காட்டிக் கொள்ளும். கல்லீரல் கோளாறுகளை கண்டுபிடிப்பதற்கு மருத்துவத்திலே இப்போது நிறைய வழிமுறைகள் எல்லாம் வந்து இருக்கின்றது. கல்லீரலிலே அழற்சி வரலாம்: Hepatitis கல்லீரலிலே சுருக்கம் வரலாம்: Cirrohsis.

கோளாறு எப்படி இருந்தாலும் சிகிச்சை முறை ஒன்று தான். மது அருந்தக்கூடாது . முழு ஓய்வு வேண்டும். புரதச்சத்து பி விற்றமின் இது அதிகமாக இருக்கின்ற சத்துணவு சாப்பிட வேண்டும்.நல்ல பழக்க வழக்கம், நல்ல ஆகாரம் இது இருந்தால் எந்த நோய்களும் கிட்டே நெருங்காது. கல்லீரலிலே கோளாறு இருந்தால் ஆரம்ப அறிகுறிகள் தெளிவில்லாமே இருக்கும். நோயாளிக்கு களைப்பு, தளர்ச்சி, மனக்குழப்பம், குமட்டல் இது எல்லாம் இருக்கலாம்.

நோயாளிகளை படுக்கப் போட்டு நன்றாக மூச்சை இழுத்து விடச் சொல்லி வயிற்றிலே அழுத்தி அழுத்திப் பார்ப்பார்கள் சில பேர். எதற்காக? ஈரல் வீங்கியிருக்கிறதா என்று பார்ப்பதற்காக... இன்னமும் சில பேர் எந்த நோயாக இருந்தாலும் அதே மாதிரி அழுத்திப் பார்ப்பார்கள். எனக்குத் தெரிந்த ஒரு சிநேகிதர் நல்லா வைத்தியம் செய்வார். அவரிடம் வைத்தியசாலைக்கு வருகிறவர்கள் யாராக இருந்தாலும் சரி... தலைவலி என்று யாராவது வந்தால்க் கூட உடனே படுக்க வைத்து வயிற்றை தான் அழுத்திப் பார்ப்பார். என்னப்பா இது... எந்த நோயாக இருந்தாலும் வயிற்றை அழுத்திப் பார்த்தால் கண்டுபிடித்து விடலாமா? என்று கேட்டேன். நான் வயிற்றை அழுத்துவது நோயைக் கண்டுபிடிப்பதற்காக இல்லை. வயிற்றிலே பணம் இருக்கிறதா என்று கண்டுபிடிப்பதற்காக! என்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணலாறு வெலி ஓயாவாக மாற்றப்பட்டு அபகரிக்கப்படும் தமிழர்களின் காணிகள்

## ரவிகரன் குற்றச்சாட்டு

**(நெளுக்குளம்)**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் மணலாறு என்ற இடம் வெலி ஓயாவாக மாற்றம் செய்யப்பட்டு தமிழ் மக்களுடைய பூர்வீக காணிகளை அபகரித்து 4238 சிங்கள மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளது. என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.**

முல்லையில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், வடமாகாணத்திலே 2415 சதுர கிலோமீற்றர் நிலப் பரப்புள்ள மாவட்டம் முல்லைத்தீவு மாவட்டம். கிட்டத்தட்ட 5 லட்சத்து தொண்ணூறாயிரம் ஏக்கர் நிலப் பரப்பை கொண்டதாக கணிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 47 455 மொத்த குடும்பங்களும், 140, 931 மக்கள் தொகையாக காணப்படுகின்றது. இதில் தமிழர்களுடைய பூர்வீக இடங்களில் 4557 குடியமர்த்தப்பட்ட சிங்கள குடும்பங்களைச் சேர்ந்த 12, 545 பேரும், முஸ்லீம் மக்களாக 1675 குடும்பங்களைச் சேர்ந்த 6382 பேரும், தமிழ் மக்களாக 41 ,210 குடும்பங்களை சேர்ந்த 121, 799 பேருமாக காணப்படுகிறார்கள்.

ஆமையன்குளம், முந்திரிகைகுளம், மறிச்சுக்கட்டி குளம் ஆகிய குளங்களையும் அதனோடு இணைந்த நிலப்பரப்புகளையும் அபகரித்தே சிங்கள மக்களுக்கு வழங்கி தமிழ் மக்கள் தமது சொந்த நிலங்களையும், குளங்களையும் ஏக்கத்தோடு பார்த்து கொண்டிருக்கும் நிலமையை ஆட்சியாளர்கள் கொக்குத் தொடுவாய், கொக்குளாய், கருநாட்டுக்கேணி மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளார்கள் என தெரிவித்தார். (நி-6-299)



### மல்லாவி ஆலடிப் பிள்ளையார் கொடியேற்றம் இன்று

(முல்லைத்தீவு)

மல்லாவி யோகபுரம் மத்தி ஆலடிப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளன.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 28 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்வசமும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (நி-6)




## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3145

**சுவஸ்திகா**

வாரத்துல ஒரு நாள் நீ மட்டும் இல்லனா ஊருக்குள்ள பாதி பேரு




பைத்தியமாக இருப்பானுங்கள் தெய்வமே என் தெய்வமே


**மாதுளன்**

அண்ணா உட்கார முடியாத தரை எது? தெரியலைடா...



அது புளியோதரை அண்ணா

**சரன்**




**கார்த்திகா**

அண்ணா அந்த முறுக்கு பாக்கெட் எவ்வளவு? 40 ரூபாய்... லூஸ் என்றால் எவ்வளவு?



எல்லாருக்கும் ஒரே விலை தான்

**காவியா**


நிம்மதியை தேட எங்கேயும் போக வேண்டியதில்லை



ஏனென்றால் எங்க தேடினாலும் அதெல்லாம் கிடைக்கவே கிடைக்காது

**றுக்ஷா**

ஒரு சிறந்த அறிவாளியுடன் பேசுவது நூறு புத்தகம் படிப்பதற்கு சமம்



அதனால நீங்கள் எப்ப வேணும் என்றாலும் என் கூட பேசலாம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 510





அதற்கு இளைய பிராட்டி தான் காரணம். அவள் ஓலை கொடுத்து அனுப்பாதிருந் தால்"

"உண்மை, உண்மை! இந்த விபரீதம் எல்லாம் ஏற்பட்டி ராது."

"என் கணவர் கப்பலி லிருந்து திரும்பி வந்ததும் இந்த உண் மையை அவரு க்கு நீர் எடுத்துச் சொல்ல வேண்டும். சொன்னால், என் னுடைய நன்றிக்குப் பாத்தி ரமாவீர்!"

"அம்மணி தங்களுடைய நன்றிக்குப் பாத்திரமாக இது ஒன்று தானா வழி? வேறு எனக்குத் தாங்கள் இடக்கூடிய பணிகள் இல் லையா?" "ஐயா! ஒரு பேதைப்பெண்ணின் நன்றிக் குப் பாத்திரமாக எத்தனையோ நூறு வழிகள் உண்டு."

"அவற்றில் இன்னும் இரண் டொன்றைச் சொல் லுங்கள். ஆதித்த கரி கால ருக்கு அப்படிப்பட்ட சந் தர்ப்பம் ஒன்று கிடைத்தது. அதை அவர் கைசோர விட்டு விட்டார். விட்டு விட்டு அப்புறம் இரவு பகலாகத் துடி துடிக் கிறார். நான் ஒரு நாளும் அத்த கைய தவறைச் செய்யமாட்டேன்!"

"இது சத்தியமா, ஐயா? ஒரு பெண்ணின் விருப்பத்தை நிறை வேற்று வதற்காக, அவள் எது சொன் னாலும் செய்யக்கூடிய மனி தரா நீங்கள்?"

"எந்தப் பெண் என்பதைப் பொறுத்தது, தேவி! நேற்று வரைக் கும் நான் பார்த்தி ருக்கும் எந்தப் பெண்ணின் விருப்பத்துக்காகவும் எதுவும் செய்திருக்கமாட்டேன்! சொன் னால் சிரித்திருப்பேன். இன்று அப்படியல்ல! தாங்கள் சொல் லிப் பாருங்கள். எனக்கு நூறு உயிர்கள் இருந்தால் அவ்வள வையும் தங்களுடைய விருப் பத்தை நிறைவேற் றுவதற்கு அர்ப்பணம் செய்வேன். ஆயி ரம் சாம்ராஜ்யங்கள் என் வசம் இருந்தால் அவ்வளவையும் தங்கள் விருப்பத்திற்காகத் தியாகம் செய் வேன். இகத்தை யும் பரத்தையும் என்றென் றைக்கும் இழக்கும்படி சொன் னால் அதற்கும் சித்தமாயிருப் பேன்.

கொடிய பகைவர்களை மன்னிக்கச் சொன்னால் மன்னிப் பேன். அத்தியந்த நண்பர்க ளின் தலையைக் கொண்டு வந்து தங்கள் காலடியில் போடச் சொன்னால், போட்டு விட்டு மறுகாரியம் பார்ப் பேன்!"

இவ்விதம் பார்த்தி பேந்திரன் வெறி கொண்ட வனைப்போல் கூறிய போது அவனுடைய உடம்பு தலையி லிருந்து கால்வரையில் நடு நடுங்கியது. அவனு டைய வாயிலிருந்து வந்த சொற்கள் குழறின. உதடுகள் துடித்தன. பற் கள் கடித்தன. ரோமங்கள் குத் திட்டு நின்றன. மூச்சு விடும் சத்தம் கொல்லன் உலைச் சத்தத்தைப் போலக் கேட்டது.

பார்த்திபேந்திரனுடைய இந்த மாறுதல் வாசகர்க ளுக்கு வியப்பை அளிக் கும். ஏன்! அவனி டமே, "நீ இப்படி ஆவாய்" என்று முதல் நாள் யாரா வது சொல்லியிருந்தால் அவன் நம்பியிருக்க மாட் டான். பிற்காலத் தில் நினைத்துப் பார்த்தால் அவனுக்கே கூட வியப்ப ளிக்கக்கூடிய காரியந் தான். ஆனால் இது பார்த் திபேந்திரனைப் பற்றிய அதிசயம் மட்டும் அல்ல மனித இயற்கையைப் பற் றிய இரசியம்.

எத்தனையோ மேதா விகள் காலமெல்லாம் ஆராய்ச்சி செய்த பின் னரும், மனித உடம்பின் அமைப்பு இரகசியத்தை நம்மால் முழுதும் அறிந்து கொள்ள முடியவில்லை. மனித இதயத்தின் அமைப்பு இரகசியத்தை நாம் எவ் வாறு அறிந்து கொள்ள முடியும். (தொடரும்)

"வந்தியத்தேவனையா சொல்கி றீர்கள்? அவனைத் தான்!"

சீச்சீ! சோழ சாம்ராஜ் யத்தையே ஆட்டு விக்கும் சக்தி வாய்ந்த பழை யாறை இளையபிராட்டி அற்ப னும், தற் பெருமைக்கார னும், அதிகப் பிரசங்கியு மான அந்த வாலிபன் மீது..... ஆம் அந்த வாலி பன் மீது மோகம் கொண் டாள்.

அதனாலே தான் அவ னைப் பழுவேட்டரையரின் தண்டனை யிலிருந்து தப்பு விப்பதற்காக ஓலை கொடுத்து இலங்கைக்கு அனுப்பினாள். பாவம்! இந் தக் கிழவர் இளவரசரின் துர்க்கதிக்குத் தாமே கார ணம் என்று துடியாய்த் துடிக்கிறார், உண்மையில்



# சிறுவர் அரங்கம்

## தங்கத் தூண்டில்



"இப்படிப் பிச்சை எடுத்து இழிவான வாழ்க்கை நடத்து கிறாயே? உனக்கு மீன் பிடிக் கக் கற்றுத் தருகிறேன். இந்தத் தூண்டிலை வைத்துப் பிழைத்துக் கொள்!" என் றான். அவனுக்கு மீன் பிடிக்கக் கற்று கொடுத்து விட்டு அங்கிருந்து சென்றான். அதன் பிறகு அந்தப் பிச்சைக்காரன் அவர் கள் வீட்டிற்கு வருவதே இல்லை.

பல ஆண்டுகள் சென்றன. செல்வந்தர் ஒருவர் அழகிய குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில் அங்கே வந்தார். அவர் கையில் தங்கத்தால் செய்யப்பட்ட சிறிய தூண்டில் ஒன்று இருந்தது. வசந்தும், சுந்தரும் அவரைப் பார்த்தனர். தங்கத் தூண் டிலை சுந்தரிடம் தந்தார் அவர். "என் அன்புப் பரிசாக வைத்துக் கொள்ளுங்கள்!" என்றார்.

தன் வீட்டிற்கு வந்த பிச்சைக்காரன்தான் அவன் என்பது வசந்துக்கு தெரிந் தது.

கோபத்தால் துடித்த அவன், "நீ சாகப் பிழைக்க இங்கே வந் தாய். உனக்கு உணவு தந்துக் காப்பாற்றியவன் நான். [illegible] இந்தத் தங்கத் தூண்டில் உரியது. என்னிடம் தா!" என்று கத்தினான். ஆனால், அவரோ, "இது உங்கள் தம்பிக்குத்தான் உரியது!" என்று உறுதியாகச் சொன்னார். இதை வசந்த் ஏற்றுக் கொள்ளவில்லை. வழக்கை நீதிமன்றத் திற்குக் கொண்டு சென்றான். நடந் ததை எல்லாம் விசாரித்தார் நீதிபதி.

வசந்தைப் பார்த்து அவர், "நீ இவருக்கு உணவு அளித்துக் காப்பாற்றியது உண்மைதான். நீ செய்த உதவி இவர் வாழ்க்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்ப டுத்தவில்லை. உன் தம் பியோ இவர் வாழ்வதற்கு வழி காட்டினார். அதைப் பயன்படுத்தி இவர் இந்த நிலைக்கு உயர்ந்தார். நிலையான உதவி செய்த சுந்தருக்கு இவர் தூண்டி லைப் பரிசு அளித்தது சரியே. இந்தத் தங்கத் தூண்டில் சுந்தருக்கே உரி யது. இதுவே என் தீர்ப்பு!" என்றார். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கை இல்லாதவனின் வாழ்க்கை காலால் நடப்பதற்குப் பதிலாக தலையால் நடப்பதை யொக்கும். – எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களுக்கு உதவ வேண்டுமென இரா. சம்பந்தர் நினைப்பாராயின்...

ஒன்றிணைந்த இலங்கைக்குள் வடக்குக் கிழக்கு இணைந்த சுயநிர்ணய சமஷ்டியை தமிழ் மக்களுக்குத் தீர்வாகத் தர வேண்டும் என தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலை வரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய இரா. சம்பந்தர் கேட்டுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினை இதுவரை தீர்க்கப்படாத நிலையில் இரா. சம்பந்தர் திடீ ரென மேற்போந்த கோரிக்கை விடுத்திருப்பது எதற்கானது என்பதுதான் புரியவில்லை. அதாவது, வடக்குக் கிழக்கு இணைந்த சம ஷ்டி அடிப்படையில் தீர்வு தேவை என்பது தான் தமிழ் மக்களின் கோரிக்கை. எனினும் அந்தக் கோரிக்கை தொடர்பில் சிங்கள ஆட்சியாளர்களோ அன்றி பௌத்த பீடங்களோ இம்மியும் கரிசனை கொள்ளவில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில் ஒன்றி ணைந்த இலங்கைக்குள், வடக்குக்கிழக்கு இணைந்த உச்சபட்ச அதிகாரத்துடன் கூடிய சமஷ்டியைத் தீர்வாகத்தர வேண்டும் என இரா. சம்பந்தர் திடீரென கேட்டிருப்பதால் பலத்த சந்தேகங்கள் தோற்றுவிக்கப்பட்டு ள்ளன.

அதாவது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இரா. சம்பந்தர் தமிழ் மக்களின் தீர்வைப் பெறுவதில் தீவிரம் காட்டவில்லை. தவிர, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டு, மூன்று லட்சம் தமிழ் மக்கள் முட்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டிருந்த போது கூட, தமிழ் மக்களுக்கு சமஷ்டி தேவை என சம்பந்தர் வாய்திறந்து கேட்கவில்லை.

மாறாக, மகிந்த ராஜபக்ஷவின் தந்தையார் அமரர் ராஜபக்ஷவின் நினைவு தினத்தில் பங்கேற்பதிலும் மகிந்த ராஜபக்ஷவின் அரசா ங்கத்துடன் நெருக்கமான உறவைப் பேணு வதிலுமே அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

உண்மையில், தமிழ் மக்களின் அரசியல் தலைவராக சம்பந்தர் இருந்து இருப்பார் ஆயின். தமிழ் மக்களைக் காப்பாற்றுமாறு சர்வதேசத்திடம் கேட்டிருக்க வேண்டும். ஆனால் அதை எதனையும் செய்யாத சம்ப ந்தர், உரிமை வேண்டுமென்று கூறியவர் களை அதட்டி விரட்டியதுடன் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பையும் உடைத்து தமிழ் இனத் தின் ஒற்றுமைக்கும் குந்தகம் செய்தார்.

இப்போது அவர் முதுமைப்பட்டு இயங்க முடியாதவராக இருந்தும் பாராளுமன்ற உறுப் பினர் பதவியைப் பிடித்து வைத்துள்ளார்.

சரி, அவரின் முதுமைக்கு இரண்டு மூன்று பொலிஸார் உதவியாக இருக்கட்டும் என் றால், தக்க நேரத்தில் அவர், அறிக்கை களை விட்டு எங்கோ தான் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அல்லது தனக்கு உதவிய பேரினவாதத்துக்கு கைமாறு செய்ய முற் படுவது தெரிகிறது.

இஃதுதான் தமிழ் மக்களுக்கு வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி அதிகாரம் தேவை யென திடீரென அவர் விடுத்த கோரிக்கை யாகும்.

ஆம். ஜனாதிபதித் தேர்தல் நெருங்குகின்ற இந்த நேரத்தில் இவ்வாறான கோரிக்கையை முன்வைத்து யாரோ ஒருசிங்கள தலைமையை தேர்தலில் தோற்கடித்து தனக்குத் தேவை யான சிங்களப் பேரினவாதி ஒருவரை ஜனாதி பதியாக்க உதவுகிறாரோ என்று எண்ணு கின்ற அளவில் நிலைமை உள்ளது.

இங்கு தமிழ் மக்களுக்கு ஏதேனும் உதவி செய்ய வேண்டும் என சம்பந்தர் நினைத்தால் அவர் அரசியலில் இருந்து முற்று முழுதாக ஒதுங்குவதுதான் பொருத்தமான விடயமாக இருக்கும்.

# வறுமையை ஒழிக்க விவசாய புரட்சியை ஏற்படுத்த வேண்டும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

கிராமங்களில் வறு மையை ஒழிக்க விவசாயப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்றும் அதற் காகவே விவசாய நவீனம யப்படுத்தல் திட்டம் முன் னெடுக்கப்படுவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க தெரிவித்துள்ளார்.

உறுமய தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், மகாவலி வளவ வலயத் தில் தெரிவு செய்யப்பட்ட 45,253 பேரில் 1,524 பேருக்கு, எம்பிலிபிட்டி மகா வலி விளையாட்டரங்கில் நேற்று காணி உறுதி களை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கல ந்து கொண்டு உரையாற் றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள் ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது உறுமய திட்டத்தின் காணிகளை வழங்க வேண்டியவர்களுக்கு அடு த்த இரு மாதங்களில் காணிகளை பெற்றுக்கொடு க்குமாறு பணிப்புரை விடு த்துள்ளேன்.

நாட்டில் 75 வருடங் களாக மக்களுக்கு காணி உறுதிகள் வழங்கப் பட்டிரு க்கவில்லை. தற்போது சட்டபூர்வமாகவே அந்த உறுதிகளை வழங்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

இது ஒரு வகையான புரட்சியாகும்.

விவசாயிகளுக்கு காணி உறுதிகளை வழங் கியது போலவே கொழும்பு மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புக்களின் வீட்டு உரிமைகள் வழங்கப் படும். அதனால் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் பேருக்கு வீட்டு உரிமை கிடைக்கும்.

விவசாய மக்களுக்கு நன்றி செலுத்தும் வகை யில் இந்த உறுமய வேலைத்திட்டம் அரசாங் கத்தினால் ஆரம்பிக்கப்ப ட்டிருக்கின்றது.

கிராமங்களில் வறு மையை ஒழிக்க விவசாயப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும். அதற்காகவே விவசாய நவீனமயப்படுத் தல் திட்டம் முன்னெடுக் கப்படுகின்றது இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்துள் ளார். (ம-7)

## தேங்காய் விழுந்ததில் 11 மாத குழந்தை மரணம்

கண்டி, கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெல் தோட்டை நாராங்ஹின்ன தோட்டத்தில் தலையில் தேங்காய் விழுந்து 11 மாத குழந்தை பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

லோகேஸ்வரன் கியா ஸ்சினி என்ற குழந் தையே இவ்வாறு உயிரிழ ந்துள்ளது.

குறித்த குழந்தையை தந்தை தூக்கி செல்லும் போதே இத்துயர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குழந்தையின் தலை பகுதியில் காயங்கள் ஏற் பட்ட நிலையில், தெல்தோ ட்டை பிரதேச வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற பின், அங்கிருந்து உடனடியாக பேராதெனிய வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டது.

குழந்தை அங்கு சிகி ச்சை பெற்றுவந்த நிலை யில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

மேலதிக விசார ணையை கலஹா பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## கொழும்பு மாளிகாவத்தையில் மண்டபத்தில் தீ விபத்து

(கொழும்பு)

கொழும்பு, மாளிகாவ த்தை ஜயந்த வீரசேகர மாவ த்தையில் அமைந்துள்ள விழா மண்டபம் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீயணைப்பு படையின் இரண்டு தீயணைப்பு வாக னங்கள் வந்து தீயை முழு மையாக அணைத்ததா கவும், உயிர் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

விழா அரங்கில் ஏற்பட்ட மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர். (ம-7)

### தமிழ்ப் பொது வேட்பாளர்

## தனி ஒரு கட்சியினால் தீர்மானிக்க முடியாது

### இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

(மட்டக்களப்பு)

ஜனாதிபதி தேர்தலுக் கான தமிழ்ப் பொது வேட் பாளர் தொடர்பில் தனி ஒரு கட்சியினால் தீர்மானிக்க முடியாது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியா ழேந்திரன் தெரிவித்துள் ளார்.

வடக்கு, கிழக்கு, மலை யகத் தமிழர்களை ஒட்டு மொத்தமாக பிரதிநிதித்து வப்படுத்துகின்ற அரசியல் தலைமைகள், புத்திஜீவி கள் என அனைவரையும் ஒன்றிணைத்து தமிழ்ப் பொது வேட்பாளர் தொட ர்பிலான கலந்துரையாடல் களை மேற்கொள்ள முடி யும் என அவர் குறிப்பிட்டுள் ளார்.

ஆரையம்பதி பொதுச் சந்தையில் அமைக்கப்ப ட்டுள்ள வர்த்தக நிலை ங்கள் கொண்ட கட்டடத் தொகுதியை திறந்து வைக் கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே இராஜா ங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் இத னைத் தெரிவித்துள்ளார். (ம-7)

## இறந்த காட்டுக் கோழியை இரகசியமாக எடுத்துச் சென்ற இ.போ.ச சாரதி, நடத்துனர் கைது

(கொழும்பு)

பேருந்தில் இடித்து உயி ரிழந்ததாக கூறி, இறந்த காட்டுப் பறவையை இரகசி யமாக எடுத்துச் சென்ற குற்றத்திற்காக இலங்கை போக்குவரத்து சபையின் சாரதியும் நடத்துனரும், கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பேருந்து தப்போவ வனவி லங்கு சரணாலயத்தின் ஊடாகச் சென்று கொண்டி ருந்த போதே காட்டுக்கோழி, பஸ்ஸில் மீது மோதியதாக தெரிவித்தனர்.

கருவலகஸ்வெவவைச் சேர்ந்த வனவிலங்குப் பாதுகாவலர்கள், சரணால யத்தின் ஊடாக வேறொரு பணிக்காக பயணித்த போது, நடத்துனர் மற்றும் சாரதி பறவையை பஸ் ஸில் ஏற்றிச் செல்வதை அவதானித்துள்ளனர்.

சாலியபுர சோதனைச் சாவடியில் பேருந்தை சோதனையிட்ட போது, இறந்த பறவையை ஓட்டு நர் இருக்கைக்கு அடியில் அவர்கள் மறைத்து வைத் துள்ளனர்.

ஒரு காட்டுப் பறவை யைக் கொன்றதற்காகவும், அப்பறவையின் சடலத்தை ரகசியமாகக் கொண்டு சென்றதற்காக கைது செ யப்பட்ட அவ்விருவரும், தலா 100,000. ரூபாய் பொலிஸ் பிணையில் விடு தலைச் செய்யப்பட்டுள்ள னர்.

இலங்கையின் தேசிய பறவை காட்டுக்கோழி என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சந்தேகநபர் தப்பிப்பு இரு பொலிஸார் கைது

சிலாபம் பொலிஸ் நிலைய கூண்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரொருவர் தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பில் இர ண்டு பொலிஸ் உத்தியோ கத்தர்கள் கைது செய்யப் பட்டுள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய போதைப்பொருள் கடத் தல்காரரொருவரே இவ் வாறு தப்பிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து, மேற் கொள்ளப்பட்ட விசாரணை யில் சந்தேக நபர் தப்பிச் செல்வதற்கு உதவி செய் ததாக சந்தேகிக்கப்படும் இரண்டு பொலிஸ் உத்தி யோகத்தர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி - பகுதி V



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

17

தேயிலைத் தோட்ட முதலாளிகளை எதிர்நோக்கிய இச்சிறு காலப் பிரச்சினைகள் வெகு விரைவில் நீங்கின. அவர்களது விடா முயற்சியினாலும் உறுதியான நம்பிக்கையினாலும் தேயிலைச் செய்கை துரிதமாக முன்னேறியது. இலங்கையின் உயர்ந்த மத்திய மலைப்பிரதேசம், தேயிலைச் செய்கைக்கு மிகவும் உவப்புடையதாகக் காணப்பட்டது.

சூரியவெப்பம், வளம் நிறைந்த மண், பருவமழை வீழ்ச்சி, பனி பெய்யும் இரவுகள் எனும் நிலைகள் உலகிலேயே அதி சிறந்த தேயிலையைப் பயிரிடுவதற்கு வேண்டிய சூழ்நிலைகளை மலைநாடு ஈந்தது. 6000 அடி உயரமான பிரதேசங்களிலும் தோட்டங்கள் திறக்கப்பட்டன. தேயிலை, எந்த உயரமான நிலத்திலும் வளருமாயினும், இலங்கையின் பிரசித்தி பெற்ற உயர்தரமான தேயிலை 3,000 அடிக்கு மேற்பட்ட பிரதேசங்களில்தான் வளருகின்றது. உயரம் அதிகரிக்க தேயிலையின் தரமும் கூடும். அதி சிறந்த தேயிலை 4,200 அடிக்கு மேல்தான் வளரும்.

1880 இற்குப் பிந்திய ஆண்டுகளில், தேயிலைச் செய்கை பொருளியல் முயற்சியாக மாறவும் அதன் விரிவடையும் விகிதத்தை அதிகரிக்கவும் பல சக்திகள் ஒன்று சேர்ந்து துணைபுரிந்தன. சிங்கோனாவின் விலைகள் வீழ்ச்சியடையத் தலைப்பட்டன. இலங்கைத் தோட்டங்களின் விளைச்சல் அசாமின் தோட்டங்களிலும் கூடுதலாகக் காணப்பட்டது. ஒரு ஏக்கரின் விளைச்சல் 500 இறாத்தல் தொடக்கம் 1000 இரறாத்தல் வரை உயர்ந்து காணப்பட்ட்து.

தேயிலை விதைகளும் பெருமளவு இலங்கையை வந்தடைந்தன. இக்காரணங்களினாலும் கோப்பிச் செய்கையின் வீழ்ச்சி உறுதிப்படுத்தப்பட்டதன் பயனாகவும் உடனடியாகக் கோப்பியிலிருந்து தேயிலைக்கு ஒருமனதாக மாற்றம் நிகழ்ந்தது.

கோப்பி நிலங்கள் மாத்திரமல்லாது கோப்பிக்கென வாங்கப்பட்டு பயிரிடப்படாத காட்டு நிலங்களிலும் தேயிலை விதைகள் நாட்டப்பட்டன. 1880இற்கும் 1895இற்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் தோட்டப் பிரதேசத்தின் பிரதான விளை பொருளாக கோப்பி வகித்த இடத்தைத் தேயிலை பெற்றது.

தேயிலை விளைவித்தல் இலாபகரமான முயற்சியென்பது நிரூபிக்கப்பட்டதன் பேறாக, அது 1897 வரை தங்குதடையின்றி முன்னேறியது. ஆண்டு தோறும் சராசரி 20,000 ஏக்கர் நிலம் தேயிலைச் செய்கைக்குட்படுத்தப்பட்டது.

இக்காலத்தின் தேயிலை உற்பத்தியின் 80 விகிதத்தை ஐக்கிய இராச்சியம் நுகர்ந்தது. 1896 அளவில் இந்தியாவிலும் இலங்கையிலும் நிறுவப்பட்ட புதுத் தோட்டங்களினின்று ஏற்றுமதியான தேயிலை கேள்விக்கு அதிகமாகக் காணப்பட்டதனால் இலண்டன் சந்தைகளில் தேயிலை தேங்கிக்கிடந்தது. தேயிலையின் விலைகளிலும் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது.

1883 இல் 15 பென்சுக்கு விற்பனையான தேயிலை, 1897 இல் 9 பென்சுக்கு விற்பனையாயிற்று. இதன் பயனதக தேயிலைப் பயிர்ச் செய்கையின் விரிவுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இக்காலத்தில் பெரும்பாலான தோட்ட முதலாளிகள் நயமின்றித் தேயிலையை விற்றனர். விலைகள் தொடர்ந்து 1905 வரை வீழ்ச்சியடைந்து வந்தன. இதனால் விரிவாக்கம் நிறுத்தப்பட்டதுமன்றி, சிலர் தேயிலைச் செய்கையையும் கைவிட்டனர். வேறு சிலர் இறப்பர்ச் செய்கைக்கு மாறினர்.

1896 முதல் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஈடு செய்யும் முகமாக முதலாளிகள் தேயிலையை விஞ்ஞான முறையில் பயிரிட்டும் கூடுதலான எந்திர சாதனங்கள் கொண்டு உற்பத்தியின் விலையைக் குறைக்கவும் முயன்றனர். இதற்கு மேலும் பெரும் முதல் தேவைப்பட்டதனால், சிறு நிலச் சொந்தக்காரர் பிற வழியின்றி தமது தோட்டங்களை பெரும் முதலுடைய கம்பனிகளுக்கு விற்றனர்.

இதன் விளைவாக பல சிறு தோட்டங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு பெரிய தோட்டங்களாக அமைக்கப்பெற்றன. இவற்றை அமைத்த கம்பனிகள் இருவிதப்பட்டவை. இங்கிலாந்தில் தலைமைக் காரியாலயங்களைக் கொண்டு இயங்கியவை ஸ்ரேளிங் கம்பனிகள் என்றழைக்கப்பட்டன. இலங்கையில் தலைமைக் காரியாலயங்களைக் கொண்ட கம்பனிகள் ரூபாய்க் கம்பனிகள் எனப்பட்டன.

1905 ஆம் ஆண்டில் நெருக்கடி நீங்கவே, புது நிலங்களில் தேயிலை மென்மேலும் பயிரிடப்பட்டு வரலாயிற்று. மிதமிஞ்சிய உற்பத்தி ஏற்படாமலிருக்க ரஷ்யா, சீனா, அமெரிக்கா எனும் புதுச் சந்தைகளுக்குத் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. முதலாம் உலகப்போரின் முதலிரு ஆண்டுகளில் தேயிலையின் விலை அதிகரித்தது. ஏனெனில் பிரிட்டன், ஆயுதந்தாங்கிய படைகளின் தேவையை முன்னிட்டு, தேயிலையைச் சேகரித்து வைக்க முற்பட்டது. இதன் பயனாக தேயிலையின் விலை அதிகரித்தது.

1915 இன் இறுதியில் கட்டுப்பாடற்ற நீர்மூழ்கிக் கப்பற் சண்டை அதிகரித்து வரவே, கப்பற்போக்கு வழிகளில் தடைகள் ஏற்பட்டு இலங்கையின் மூன்று முக்கிய பொருள்களின் ஏற்றுமதியைப் பாரதூரமாகப் பாதித்தது.

போரினை ஊக்கப்படுத்துவதற்கு தேயிலை ஓர் இன்றியமையாத பொருளாகக் கருதப்பட்டதினால், அதன் ஏற்றுமதி அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. இதன்படி அரசாங்கம் உறப்த்தியாளர்களுடன் நேரடியான பேச்சுவார்த்தைகள் நடாத்தி, அவர்களிடம் தேயிலையை நேரடியாக விலை கொடுத்து வாங்கியது.

ஒரு குறிக்கப்பட்ட அளவு தேயிலையை மாத்திரம் அரசாங்கம் வாங்கியதனாலும், தனிப்பட்டவர்களின் ஏற்றுமதி தடை செய்யப்பட்டதனாலும் 1917-18 ஆம் ஆண்டுகளில் ஏற்றுமதி குன்றியது. 1920 இல் பாதுகாப்புக் கட்டுப்பாட்டின் கீழ் தேயிலை பழைய நிலையை அடைந்தது.

இலங்கைப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை வரலாற்றில் 1922 ஆம் ஆண்டு ஒரு திருப்பமாக அமைந்தது. போரினால் ஏற்பட்ட இன்னல்கள் நீங்கின. பிறநாட்டு பசளை வகைகளை இலகுவிற் பெறக்கூடிய வாய்ப்புக்களும் தோன்றின. நுகர்ச்சி நாடுகளும் கொள்வனவு வலுவை மீண்டும் பெற்றன. இதன்பின்னர் சந்தையைப் பாதிக்கும் காரணிகள் வெளிச் செல்வாக்கின் கீழிருக்கவில்லை. இதன் காரணமாக பழைய சாதாரண நிலை மீண்டும் நில்வியது.

### தேயிலை ஆராய்ச்சிக் கழகம்:

தேயிலைத் தொழிலில் ஏற்படும் விஞ்ஞானச் சிக்கல்களை ஆராய்ந்து அபிவிருத்தி செய்து நவீன முறைகளைக் கையாளுவதற்கு 1925 ஆம் ஆண்டு தலவாக்கொல்லையில் சென்ற் கூம்ப்ஸில் இலங்கை அரசாங்கத்தினாலும் இலங்கைத் தேயிலைத் தொழிற் பகுதியினராலும் தேயிலை ஆராய்ச்சிக் கழகம் தாபிக்கப்பட்டது.

தீவிலிருந்து ஏற்றுமதியாகும் தேயிலையில் விதிக்கப்படும் வரிப் பணத்தைக் கொண்டு இக்கழகம் நிருவகிக்கப்பெற்றது. அது நவீன ஆராய்ச்சிச் சாலைகளையும் தொழிற்சாலைகளையும் 400 ஏக்கர் கொண்ட தோட்டத்தையும் சொந்தத்தில் வைத்துப் பரீட்சைகளை நடாத்தத் தொடங்கியது. தோட்டங்களின் மண் வளத்தைக் காத்தல், நிர்வாகத்தை விருத்தி செய்தல், தேயிலைச் செடிகளிடையே ஏற்படும் நோய்கள், பூச்சிகள், களைப்புல் முதலியவற்றை அகற்றுதல், உற்பத்தியின் தரத்தை பெருக்குதல், உயர்ந்த தரமுள்ள செடிகளைத் தெரிந்தெடுத்தல் என்பவை அக்கழகத்தின் வேலைகளாகும்.

### தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

1920 ஆம் ஆண்டில் மகோன்னத நிலையில் ஏறிச் சென்ற தேயிலை வர்த்தகம் 1932 இல் மந்த நிலையை அடைந்தது. அதன் எதிர்காலம் கவலைக்கிடமாயிற்று. இவ்வீழ்ச்சியைத் தடுப்பதற்காக, தேயிலை உற்பத்தி நாடுகளான இந்தியா, இலங்கை, டச்சுக் கிழக்கிந்திய தீவுகள் எனும் நாடுகளின் பிரதிநிதிகள் இலண்டனில் கூடி, கிராக்கிக்கும் உற்பத்திக்கு மிடையே ஓர் உறுதியான நிலையை ஏற்படுத்தும் பொருட்டு, ஐந்து ஆண்டுகளுக்கு ஒவ்வொரு நாடும் அதன் தேயிலை ஏற்றுமதியைச் சட்டமூலம் கட்டுப்படுத்தியமைக்க வேண்டுமெனத் தீர்மானித்தனர்.

மூன்று நாட்டு அரசாங்கங்கள் இந்த யோசனையை ஏற்றுக் கொள்ளவே, 1933 பெப்ரவரியில் இலண்டனில் சர்வதேச தேயிலை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன்படி இலங்கையினின்று ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்பட்ட தொகை 1929 ஆம் ஆண்டின் மொத்த ஏற்றுமதியில் 25 விகிதமென நிர்ணயிக்கப்பட்பட்டது. இதுவே "இலங்கை ஏற்றுமதிக் கோட்டா" என்று அழைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் பயனாக விலைகளுக்கு விமோசனம் கிடைத்ததுமன்றி, ஒப்பந்த காலத்தில் விலைகளும் உறுதியாயிருந்தன. ஐந்து வருட காலப் பகுதி முடிந்ததும், இத்திட்டம் மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது.

அதன்பின் உலக மகாயுத்த காலத்தை முன்னிட்டும், யுத்தம் முடிந்தபின் நிலைமை சீராவதை முன்னிட்டும் அதுமேலும் மேலும்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதகலில்...

சென்ற பின்னர், குறித்த யுவதிக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குடாநாட்டில் நீண்ட காலத்தின் பின்னர் கொரோனாத் தொற்றுடன் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## திருடன்...

மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பியகமவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"நாம் ஆட்சிக்கு வந்தவுடன் கிராமிய அலகுகளிலிருந்து கொழும்பு துறைமுக நகரம் வரை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் அனைத்தும் மீள ஆரம்பிக்கப்படும்.

அதேவேளை, இலங்கை அரசியலால் மக்கள் குழப்பத்தில் உள்ளனர். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் ஒரு கட்சியில் இருக்கும்போது அதனை விசாரித்தவர்களும் அதே கட்சியில் உள்ளனர். இதனால் மக்களோடு நாமும் குழப்பத்தில் உள்ளோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## இன்று முதல்...

மணிக்கு பாராளுமன்றம் கூடவுள்ளதுடன் காலை 9.30 முதல் 10.30 வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, காலை 10.30 முதல் 5.00 மணி வரை சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் விசேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்டுள்ள ஐந்து கட்டளைகள், உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகள், காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மற்றும் விளையாட்டில் ஊக்கப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் மாலை 5.00 மணிமுதல் 5.30 வரை ஒத்திவைப்பு வேளை பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மேலும் எதிர்வரும் 19ஆம் திகதி தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தீர்மானம் மற்றும் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக் குழுச் சட்டத்தின் கீழ் விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

20ஆம் திகதி பெண்களின் வலுவூட்டல் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மற்றும் யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழு சட்டமூலம் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சமைத்து...

இடம்பெற்றுள்ளது.

இதில் அல்வாய் வடமேற்கைச் சேர்ந்த சுகிர்தலீலா ஸ்ரீ ரஞ்சன் (வயது-67) என்பவரே உயிரிழந்தவராவார்.

மதிய உணவு சமைத்துக் கொண்டிருந்தபோது தலைச்சுற்று ஏற்பட்டதாக கூறி அவர் படுத்துள்ளார்.

சற்று நேரத்தில் அவர் அசைவற்றிருப்பதையடுத்து உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## ஐ.எம்.எப்...

ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று சமூகத்தில் மீள முடியாத அழுத்தம் உருவெடுத்து மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மக்கள் வறுமையில் வாடினாலும் வரிக்கு மேல் வரி விதிக்கும் வரிச் சுனாமி விதிப்பது நின்றபாடில்லை. சர்வதேச நாணய நிதியம் கூறியதாக வாடகை வீட்டிற்கும் வரி விதிக்கும் சூத்திரத்தை அரசாங்கம் உருவாக்கி வருகின்றது.

ஐ.எம்.எப் சொல்வதை எல்லாம் செய்வதற்கு இந்த அரசாங்கத்திற்கு மக்கள் ஆணை வழங்கப்படவில்லை. அரசாங்கம் வினைத்திறன் மிக்கதாக இருந்தால், மக்களுக்காக நல்லதொரு உடன்பாட்டை எட்டுவதற்கான வாய்ப்புகள் இருந்தும் அவ்வாறான எதுவும் நடக்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஆடும் பொம்மை ஆட்சியே நாட்டில் உள்ளது. இந்த அரசாங்கம் வரிச் சுனாமியை மக்களின் தோள்களில் சுமத்தியுள்ளது.

எமது நாட்டின் இறையாண்மையை நாங்கள் யாருக்கும் விற்கவில்லை. நல்ல நிலையில் இருந்து, நல்ல தொரு கலந்துரையாடலுக்குச் சென்றால் மக்கள் தரப்பில் செய்ய வேண்டியதை சரியாக செயல்படுத்த முடியும். மக்களின் அழுத்தத்தைக் குறைத்து, மக்களின் அசௌகரியங்களைக் குறைப்பதன் மூலம், ஒடுக்கு முறையான மக்கள் வாழ்க்கையை உருவாக்காமல் நல்ல ஆக்கபூர்வமான உடன்பாட்டை எட்ட முடியும். என்றாலும், இன்று பொம்மை அரசாங்கமே காணப்படுவதாகவும், இது இந்த யுகத்தின் அவலமாகும்.

வங்குரோத்தான, காலாவதியான கோட்பாடுகளால் நாட்டுக்கு எந்தப் பயனும் இல்லை. எமது நாட்டிற்கு சர்வதேச நாணய நிதியத்தின் தலையீடு தேவை. வங்குரோத்தான கோட்பாடுகளின் அடிப்படையில் நாம் செயற்பட்டால், எமது நாடு இன்னுமொரு பாதாளத்தில் விழும். நாட்டுக்கு பெற முடியுமான சிறந்ததை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றார். (ம-7)

## நாட்டின்...

பதிவு செய்யப்பட்டிருந்ததாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடம் 2.2 சதவீதத்தினால் வளர்ச்சியடையும் என எதிர்பார்ப்பதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.06.17
சீட்டிழுப்பு இலக்கம் 5507
W 0 0 2 5 7 2
அத சம்பத
W 2 5 7 2
சீட்டிழுப்பு இலக்கம் 82
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.06.17
சீட்டிழுப்பு இலக்கம் - 1537
Q 34 40 64 73 Q
Double Chance 32751

மெகா பவர்
திகதி 17/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1855
X 16 12 33 34 51
50752

லக்கி 7 VIP
திகதி 2024.06.17
சீட்டிழுப்பு இலக்கம் 0333
S 2 3 9 6 8 7 S

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3749
சீட்டிழுப்பு திகதி 17.06.2024
Z 20 47 59 62
Z 55934

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.17
சீட்டிழுப்பு இலக்கம் 0816
விருச்சிகம் 01 39 44 59 விருச்சிகம்
62887 26

உத்தியோகபூர்வ முடிவுகள்
17.06.2024 வெற்றி வாரம் 215 வர்ணம் ஊதா
Y 5 2 3 4 2 9
58390
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,168,708.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2481 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 17.06.2024 தினம் திங்கள்
12 30 52 59 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 93,939,446.40

சனிதா
திகதி 2024.06.17 வெற்றி வாரம் 4642
40 49 63 70 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,972,582.00
77891

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4193 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.17 தினம் திங்கட்கிழமை
32 40 50 54 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,781,094.00
508469

G 39 54 56 60 70
1657 பச்சை 17.06.2024 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 528,229,673.40

ஜயோதா Jayoda
திகதி 2024.06.17 வெற்றி வாரம் 2034 வர்ணம் செம்மஞ்சள்
15 22 41 64 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 23,918,965.60

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2307
சீட்டிழுப்பு திகதி : 2024.06.17
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 120,919,854.40
14 38 66 72 C
590872

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**

- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (C-0616) (ஆங்கில அறிவு அவசியமானது)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0616)

## சனல் ஆடுகள் விற்பனைக்குண்டு

வளர்ந்த குட்டிகளுடன் ஆடு - 110,000/=
கிடாய்கள் 02 - 195,000/=
தொடர்புகளுக்கு: (1257)

**076 234 6416**

## அமெரிக்க லொத்தர் விசா முடிவுகள் வெளியாகிவிட்டன

நீங்கள் அமெரிக்க அதிஸ்ட விசா வெற்றியாளரா? உடனடியாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.

எமக்கூடாக விண்ணப்பித்தவர்கள் எமது கிளைகளில் நேரடியாக பார்வையிடலாம்.

ஆரம்ப விண்ணப்பம் முதல் இறுதி விசா நேர்காணல் வரை முழுமையாக உதவ தயாரக உள்ளோம்.
(C-0616)

**V2 TRAVELS 0768226244**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- இருபது அடிப்பாதை (20)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா இருபது இலட்சம் 20,00,000/=

(1259)

**Golden Real Estate (pvt) Ltd**
**077 029 4164, 077 329 4130, 077 294 1521**


## மரண அறிவித்தல்



பிறப்பு 11 - 06 - 1946

இறப்பு 17 - 06 - 2024

## வல்லிபுரம் கமலநாதன்

**(முன்னாள் பிரதி நகர பிதா – பருத்தித்துறை நகராட்சி மன்றம்)**

தும்பளை திகிரியைப் பிறப்பிடமாகவும் ஆத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கமலநாதன் அவர்கள் 17.06.2024 திங்கட்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவநாயகியின் ஆருயிர்க் கணவரும் தயாளன்(கனடா) அவர்களின் அன்புத் தந்தையும் சயந்தினியின் அன்பு மாமனாரும் புருஷோந்தனன், அத்விகா ஆகியோரின் பாசமிகு பேரனும் இராமச்சந்திரன்(லண்டன்) காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், மகாதேவன், பாலச்சந்திரன், பரிமேல் அழகன் ஆகியோரின் உடன் பிறந்த சகோதரரும் காலஞ்சென்ற பரமநாதன் - வள்ளிமுத்துவின் மருமகனும் சிவநாதன் காலஞ்சென்றவர்களான பொன்னையா, லோகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை இன்று (18.06.2024) காலை 7.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆத்தியடி,
பருத்தித்துறை.

தகவல் : குடும்பத்தினர்
077 673 6901
(C-0613)

## மரபணு...

13ஆவது சீர்திருத்தம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில்,

கி.பி. 6 மற்றும் 7ஆம் நூற்றாண்டுகளிலேயே சிங்கள மொழி தோன்றியதாகவும் அதற்கு முன் சிங்கள இனம் இருந்திருக்க வாய்ப்பில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர் மெர்வின் சில்வா கூறுவது போல துட்டகைமுனு ஒரு சிங்கள மன்னன் இல்லை. துட்டகைமுனு வாழ்ந்த காலத்தில் சிங்களம் என்ற ஒரு மொழியே இல்லை.

துட்டகைமுனு ஒரு சிங்கள மன்னன் எனக் கூறும் மெர்வின் சில்வா இதற்கான விளக்கத்தை அளிக்க வேண்டும் எனவும் விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பாளி மற்றும் தமிழ் ஆகிய மொழிகளின் கலவையிலேயே சிங்கள மொழி உருவாக்கப்பட்டது. இலங்கையில் பௌத்த மதம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு பாளி மொழியும் கொண்டுவரப்பட்டது. ஆனால், தமிழ் மொழியே இலங்கை தீவின் ஆதி மொழி என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## ஜே.வி.பி...

நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, 1977 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக்காலத்தில் இந்த நாட்டில் உற்பத்தி பொருளாதாரம் சிறந்த மட்டத்தில் காணப்பட்டது.

ஆனால் அப்போதைய காலகட்டத்தில் அவரது ஆட்சி கவிழ்ப்புக்கு பின்னின்று செயற்பட்டவர்கள் மக்கள் விடுதலை முன்னணியினர். அதனையடுத்து நாட்டில் ஜே.ஆர் ஜயவர்தனவின் ஆட்சி அமைந்தது.

ஜே.ஆர் ஜயவர்தனைவை ஆட்சியில் இருந்து வெளியேற்றுவதற்காக ரணசிங்க பிரேமதாசவை கொண்டுவந்தனர். அதனையடுத்து 88 மற்றும் 89 ஆண்டு காலப்பகுதியில் கலவரத்தின் போது தீவைத்து மக்களை கொன்றனர். மேலும் அதனையடுத்து ரணசிங்கவை ஆட்சியில் இருந்து வெளியேற்றுவதற்காக சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு ஒத்துழைப்பு வழங்கினர் என்றார். (ம-7)

## தேர்தலில்...

நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தேர்தலை இலக்கு வைத்து சஜித் பிரேமதாச வடக்கிற்கு சென்று பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்.

சிறு பிள்ளைகளை அதாவது 10 லட்சம் ரூபாவுக்கு பாடசாலை மாணவர்களுக்கு ஸ்மார்ட் வகுப்பறைகளை வழங்குவதன் ஊடாக தமது அரசியல் பிரசாரத்தை மேற்கொண்டுவருகின்றார்.

தேர்தலில் வெற்றிபெறுவதற்காக 13 ஆவது திருத்தத்தை பற்றிப் பேசுகின்றார். அதனை பயன்படுத்தியே தேர்தலில் வாக்குப்பெற்று கரைசேர எண்ணுகின்றார்.

ஆனால் நாம் 13 ஆம் திருத்தத்தை காரணம் காட்டி தேர்தல் பிரசார பணிகளை நாம் மேற்கொள்ளவில்லை. கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களின் அடிப்படையிலேயே நாம் செயற்படுகின்றோம் இந்த நாட்டில் வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான முகாமைத்துவ திட்டங்கள் எம்மிடம் உள்ளன என்றார். (ம-7)

## யாழில் நாளை கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையை கண்டித்து நாளை புதன்கிழமை (19) ஆம் திகதி யாழ்ப்பாண பிரதான பேருந்து நிலையம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-7,33)


## வேலையாள் தேவை

வீட்டில் தங்கி நின்று பணி புரிவதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (1260)

**076 264 4237**

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (1256)

**076 825 7716 (ஆகாஸ்)**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல இந்திய சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.**

- ரொட்டி/ கொத்து தயாரிப்பவர்
- தோசை தயாரிப்பவர்
- யூஸ் தயாரிப்பவர்
- சிற்றுண்டிகள் தயாரிப்பவர் ஆண்/பெண்
- உணவு பரிமாறுபவர் ஆண்/பெண்
- துப்பரவு பணியாளர் ஆண்/பெண்

தொடர்புகளுக்கு: (1258)

**070 664 7466**
**077 469 6695**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபன[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org